பொருளடக்கம்

திருமணத்தின் சட்டங்கள்



வெளியீடு

தர்பியதுல் முதஅல்லிமீன் மாணவர் மன்றம்

மக்தூமிய்யா அரபிக்கல்லூரி

பள்ளப்பட்டி - 639 205

கரூர் மாவட்டம்

திருமணம் - நிகாஹ்

நிகாஹ் என்றால் என்ன?

நிகாஹ் என்ற வார்த்தைக்கு உடலுறவு கொள்ளுதல் என்று பொருள்.

நடைமுறையில் ஹலாலான முறையில் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து கணவன் மனைவியாக வாழ்வதற்கு மனப்பூர்வமாக இரு ஆண் சாட்சிகளின் முன்னிலையில் ஒப்பந்தம் செய்து கொள்வதற்குப் பெயர் நிகாஹ் இதையே நடைமுறையில் திருமணம் என்று சொல்கிறோம்.

திருமணம் முடிப்பது அவசியமா?

திருமணம் முடிக்காமல் ஆசையை அடக்க முடியாது விபச்சாரத்தில் அகப்பட்டு கொள்ளும் அபாய நிலையில் உள்ளவர்கள் மனைவிக்கு மஹ்ர் மற்றும் நபகா (உணவு, உடை, உறைவிடம்) கொடுக்க வசதியும், உடல் ஆரோக்கியமும் இருந்தால் திருமணம் செய்து இல்லற வாழ்வில் பிரவேசிப்பது பர்ளு (கட்டாயக் கடமையாகும்).

பொதுவாக திருமணம் செய்து கொள்வது சுன்னத்தே முஅக்கதாவாகும். சிலர் வாஜிப் என்றும் கூறியுள்ளனர். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் துறவறத்தை மேற் கொள்ளவில்லை. இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு வழி காட்டியுள்ளார்கள்.

மஹ்ர் மற்றும் மனைவிக்கு செய்ய வேண்டிய உடை உறைவிடம் உணவு போன்றதை செய்ய வசதியில்லாதவர் திருமணம் செய்யாமலிருப்பது அவசியமாகும். இம்மாதிரியானவர் நோன்பு நோற்று இச்சையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

திருமணம் செய்தால் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய இயலாது என்று உறுதியான நிலையில் உள்ளவர்கள் திருமணம் செய்யக்கூடாது ஹராமாகும்.

திருமணம் செய்யாமலே ஆசையை அடக்கி ஒழுக்கத்துடன் வாழ முடியும் என்ற நம்பிக்கையில் உள்ள தக்வா நிறைந்தவர்கள் திருமணம் முடிக்காமலிருப்பதற்கு அனுமதி இருக்கிறது - ஆனால் திருமணம் முடிக்காமலிருப்பது சிறந்தது என்று கூற முடியாது.

திருமணத்தின் முஸ்தஹப்புகள்

திருமணத்தை தெரியப்படுத்தி பகிரங்கப்படுத்தி செய்வது முஸ்தஹப்பாகும். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் திருமணத்தை பகிரங்கப்படுத்துங்கள், பள்ளிவாசல்களில் நடத்துங்கள் என்று கூறியுள்ளார்கள். - (திர்மிதி)

திருமணத்தை வெள்ளிக்கிழமை பள்ளிவாசலில் செய்வதும் முஸ்தஹப்பாகும். பெண் பேசி முடித்த பிறகு கணவன் பெண்ணைப் பார்ப்பதும் முஸ்தஹப்பாகும்.

கணவனை விட மனைவி வயதில் பொருளில் வம்சத்தில் குறைவாக இருப்பதும், குணத்தில் ஒழுக்கத்தில் பயபக்தியில், அழகில் உயர்வாக இருப்பதும் முஸ்தஹப்பாகும்.

தந்தை தன் வாலிபப் பெண்ணை பணத்திற்காக வயது முதிர்ந்தவருக்கோ அழகற்ற தோற்றமுடையவருக்கோ மணமுடித்து வைப்பது நல்லதல்ல.

திருமணம் நிறைவேற நிபந்தனைகள்.

திருமணம் நிறைவேற ஈஜாப் - கபூல் அவசியமாகும். நான் எனது மகளை அல்லது இன்ன பெண்ணை உமக்கு நிக்காஹ் செய்து வைத்து விட்டேன் நீங்கள் ஏற்று கொள்கிறீர்களா? என்று சொல்வதற்கு ஈஜாப் என்று சொல்லப்படும். மாப்பிள்ளை "நான் ஏற்றுக் கொண்டேன்" என்று சொல்வதற்கு கபூல் என்று சொல்லப்படும். இந்த இரண்டும் இல்லாமல் நிக்காஹ் கூடாது.

ஈஜாப் - கபூல் இந்த இரண்டு வார்த்தைகளும் கடந்த கால வினைச் சொல்லில் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்றாவது அப்படி இருக்க வேண்டும். இரண்டும் நிகழ் காலத்தின் வார்தையிலோ, வருங்காலத்தின் வார்த்தையிலோ, இருந்தால் திருமணம் கூடாது. (ஏற்றுக் கொண்டீர்களா என மாப்பிள்ளையிடம் வலியோ, வகீலோ கேட்டு மாப்பிள்ளை அல்ஹம்துலில்லாஹ் என்று சொன்னால் நிகாஹ் கூடாது).

கபூலுடைய வார்த்தையை வார்த்தையால் சொல்ல வேண்டும் தலையாட்டினால் கூடாது. ஆம் என்று சொன்னாலும் கூடாது. வாய் பேச முடியாத ஊமையாக இருந்தால் தலையாட்டினால் கூடும் எழுதத் தெரிந்தால் நாம் எழுதிக் காட்டி அவரிடம் எழுதி வாங்க வேண்டும்.

ஈஜாப் - கபூல் ஒரு தடவை சொன்னால் போதும் மூன்று தடவை சொல்வதும் அவசியமில்லை. இதே போன்று ஐந்து கலிமாக்கள் சொல்லிக் கொடுப்பதும் அவசியமில்லை. ஈஜாப் - கபூல் அரபியிலே சொல்லித் தருவதும் அவசியமில்லை. அவரவர் புரியும்படி தாய் பாஷையில் சொல்லித் தருவது தான் சிறந்ததாகும்.

ஈஜாப் - கபூல் நடத்தும் போது வலீ - அல்லது வகீல் மாப்பிள்ளையின் கையைப் பிடிக்க வேண்டும் என்றோ, கைகளைத் துண்டைப் போட்டு மூடிக் கொள்ள வேண்டுமென்றோ எந்த முறையும் ஷரீஅத்தில் கிடையாது. ஈஜாப் கபூலை சப்தமிட்டுக் கூற வேண்டும். சப்தமே வராமல் மெதுவாக கூறக்கூடாது.

‘குஃப்வு’ பொருத்தம் பார்த்தல்

ஒரு பெண்ணிற்கு கணவரை தேர்ந்தெடுக்கும் போது கணவரிடம் பார்க்க வேண்டிய பல விஷயம் உள்ளது. அதற்கு (பொருத்தம் பார்த்தல்) என்று சொல்லப்படும்.

அவைகள் :

1. கணவன் முஸ்லிமாக இருக்க வேண்டும்.
2. நல்ல வம்சத்தை சேர்ந்தவனாக இருக்க வேண்டும்.
3. மனைவியின் அந்தஸ்திற்குத் தகுந்த தொழில் செய்பவராக இருக்க வேண்டும்.
4. மார்க்கப்பற்று
5. பொருள்
6. ஹராமான வருவாய் உள்ளவர் ஹலாலான வருவாய் உள்ளவருக்கு நிகராக மாட்டார்.

ஆண், பெண் பருவமடையும் வயது

இஸ்லாமிய ஷரீஅத்தில் ஆணோ, அல்லது பெண்ணோ பருவமடைந்து விட்டார்கள் என்பதற்கு சில அடையாளங்கள் கூறப்படுகிறது.

ஆண் : 1. இஹ்திலாமாவது (தூக்கத்தில் ஸ்கலிதமாகுதல்)

2. அவனால் பெண் கர்ப்பமடைவது

3. இச்சையோடு இந்திரியம் வெளியாவது

இந்த அடையாளங்கள் தென்படாத போது 15 வயது பரிபூரணம் அடைந்தால் ஷரீஅத்தில் அவனை பருவமடைந்தவனாக கருதப்படுகிறது.

பெண் : 1. ஹைளு (மாத விடாய்) வருவது

2. இஹ்திலாமாவது

3. கர்ப்பம் தரிப்பது

4. விழிப்பில் இச்சையோடு இந்திரியம் வெளியாவது. இந்த அடையாளங்கள் தென்படாத போது. 15 வயதை அடைந்தால் ஷரீஅத்தில் அவள் பருவமடைந்தவளாக கருதப்படுகிறது.

நூல் : துஹ்பதுன் நிகாஹ் பக் : 8

ஆண், பெண்ணின் திருமண வயது

❖ (ஆணோ, பெண்ணோ) பருவமடைந்த பின் திருமணம் முடித்து வைக்க வேண்டும்.

❖ இன்றைய சூழ்நிலையில் வயதுக்கு வந்த பின் உடனடியாக திருமணம் முடிப்பதால் உடல் உறுப்புகளும், நரம்புகளும் பாதிப்பை சந்திக்க நேரிடுகிறது.

❖ வாலிபர்கள் உடல் ஆரோக்கியத்தையும், ஆற்றலையும் பாதுகாத்து, தவறான செயல்களில் ஈடுபடாமல் இருப்பது அவசியம்.

❖ உடலாலும், உள்ளத்தாலும், திருமணத்திற்கு தேவையான ஆற்றலையும் சக்தியையும் அடைந்த பின் திருமண பந்தத்தில் நுழைவதனால் பேரின்பம் கிட்டுகிறது.

❖ வயதிற்கு வந்தவுடன் பெண் பேசி வைப்பது நல்ல விஷயமாகும். காரணம் : மனதை உலக விஷயத்திலும் தேவையற்றதிலும் செல்வதை விட்டும் பெண் பேசி வைப்பதின் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

நூல் : துஹ்பதுன் நிகாஹ் பக் : 14-15

பெண்ணின் திருமணத்தை தாமதிப்பதின் விளைவு

❖ ஒரு பெண்ணுக்கு தக்க வயது வந்தும் அவரின் பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்து வைக்காமல் இருந்து அந்த பெண் தவறான வழியில் சென்று விட்டால் அதற்கு தாய் தந்தையரே பொறுப்பாளராக இருக்கிறார்கள் என தவ்ராத் வேதத்தில் எழுதப்பட்டுள்ளதாக பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

அறிவிப்பு : உமர் இப்னு கத்தாப் (ரளி) நூல் : பைஹகீ.

பேசி முடிக்கப்பட்ட பெண்ணை திருமணம் செய்யப் போகும் கணவன் பார்க்கலாமா?

பேசி முடிக்கப்பட்ட பெண்ணை நிச்சயம் செய்வதற்கு முன் அப்பெண்ணை மணக்கப் போகும் மாப்பிள்ளை பார்ப்பது கூடும்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபி முஹைரா (ரளி) அவர்களிடம் நீ மணக்கப் போகும் பெண்ணை பார்த்து கொள் - அதனால் உங்களுடைய இல்லற வாழ்வு நிரந்தரமாக இருக்கும் என்று கூறினார்கள்.

நூல் : முஸ்லிம்

ஒரு தடவை ஒரு நபித் தோழர் ஒருவர் நிகாஹ் செய்யப் போகிறேன் என்றார். நீ அந்தப் பெண்ணை நேரில் பார்த்துக் கொண்டாயா? என நபிகளார் வினவினார்கள் அதற்கு அவர் இல்லை என்றார். உடனே நபிகளார் அவளை பார்த்துக் கொள். ஏனென்றால் அன்ஸாரி பெண்களின் கண் சற்று சிறியதாக இருக்கும் எனக் கூறினார்கள்.

நூல் : நஸயீ

பார்ப்பதின் ஒழுக்கங்கள்

1. இந்தப் பெண்ணை கட்டுவது என கணவன் உறுதியாக முடிவுக்கு வந்து விட்டால் அந்தப் பெண்ணின் முகம் கையை கணவன் பார்த்து கொள்ளலாம்.

2. அவசியம் ஏற்பட்டால் பல தடவை பார்க்கலாம்.

3. நிச்சயம் செய்யும் நாளன்று இருவரும் பேசிக் கொள்ளலாம்.

4. தொடக்கூடாது முஸாபஹா செய்யக் கூடாது.

5. நிச்சயம் செய்த பிறகு நெருங்கிய உறவினர்கள் யாரும் இன்றி இருவரும் சந்திக்கக் கூடாது.

6. திருமணத்திற்கு முன் இருவரும் சகஜமாக பழகுவதோ தனிப்பட்ட முறையில் நேரிடையாகவோ செல் போன் மூலமாக தொடர்பு கொள்வதோ, பயணம் செய்வதோ கண்டிப்பாக கூடாது.

சாட்சிகள்

நிகாஹ் கூடுவதற்கு இரு சாட்சிகள் இருப்பது நிபந்தனையாகும். சாட்சிகள் இன்றி நிக்காஹ் கூடாது என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இரு சாட்சிகளும் பருவமெய்திய சுதந்திரமான ஆண்களாக இருப்பது அவசியம் அல்லது இரு பெண்கள் ஒரு ஆண் இருந்தாலும் கூடும்.

இரு சாட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து ஈஜாப் - கபூலை அருகிலிருந்து காதால் கேட்பது அவசியமாகும். செவிடர்கள் சாட்சியாக இருக்க முடியாது. சாட்சிகளுக்கு புரியும் பாஷையில் தான் ஈஜாப் - கபூல் இருக்க வேண்டும் பெண்ணிடம் அனுமதி வாங்கும் போது அதை சாட்சிகள் கேட்பது அவசியமில்லை. எனினும் சிறந்ததாகும். அதன் முறை மணப் பெண்ணிடம் அவருடைய வலீ இரு சாட்சிகளுடன் நான் உன்னை இன்னாரின் மகன் இன்னாருக்கு இவ்வளவு ரொக்க அல்லது தவனை மஹ்ருக்கு நிகாஹ் செய்து வைக்க நாடியுள்ளேன் உனக்கு சம்மதமா? என்று கேட்க வேண்டும். அதற்கு அப்பெண் சம்மதம் தான் என்று சொன்னாலோ, அல்லது சம்மதத்தை தெரிவிக்கும் தோரனையில் வெட்கப்பட்டு மௌனமாக இருந்தாலும் சம்மதமாகவே கருதப்படும். ஆனால் அப்பெண் விதவையாக இருந்தால் தெளிவாக சம்மதம் தெரிவித்தால் தான் நிகாஹ் கூடும்.

நிகாஹ் முடிந்த பிறகு சபையில் உள்ள ஒவ்வொருவரும் அவருக்காக "பாரகல்லாஹு லகுமா வபாரக அலைகுமா வஜமஅ பைனகுமா ஃபீகைர்" என்று துஆ செய்வது முஸ்தஹப்பாகும்.

திருமணம் முடிந்தவுடன் காய்ந்த (கஜுர்) பேரீத்தம்பழம் இரைத்து பங்கீடு செய்வது முஸ்தஹப்பாகும். இதைத்தவிர மற்றப் பொருட்களை இரைப்பது நல்லதல்ல. நிகாஹ் குத்பா ஓதுவது முஸ்தஹப்பாகும். அமைதியாக பேசாமல் குத்பாவை கேட்பது வாஜிபாகும். அந்த சமயம் எந்த உலக வேலையும் செய்வது கூடாது. குத்பா ஓதி நிகாஹ் நடத்தி வைப்பவருக்கு நன்கொடை கொடுப்பது கூடும்.

டெலிபோன் மூலம் ஈஜாப் கபூல் செய்தால் நிகாஹ் கூடாது பெண் போன் செய்து ஒரு வகீலை ஏற்படுத்தி இன்னாருடன் நிகாஹ் செய்து வையுங்கள் என்று கூறிவிட்டால் அவர் மாப்பிள்ளையிடம் ஈஜாப் செய்து கபூல் வாங்கினால் நிகாஹ் கூடும்.

ஆணும், பெண்ணும் வயதுக்கு வந்த முஸ்லிமாக இருந்து இரு முஸ்லிம் சாட்சிகளுக்கு முன்னிலையில் ரிஜிஸ்டர் மேரேஜ் (பதிவுத் திருமணம்) செய்தால் அது கூடும்.

சாட்சியாளர்கள் இருக்க வேண்டிய இடம் :

❖ மணப்பெண்ணிடம் அனுமதி கேட்கும் நேரத்தில் சாட்சியாளர்கள் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

❖ ஈஜாப், கபூல் கேட்கும் நேரத்தில் வலீகாரர் முன்னிலையில் இரு சாட்சியாளர்கள் இருப்பது சிறந்ததாகும். நூல் : ஷாமீ

சாட்சியாளர்களின் தகுதிகள் :

இரண்டு சாட்சியாளரும் ஆணாகயிருத்தல் அல்லது ஒரு ஆண் இரு பெண்கள் சாட்சியாளராகயிருப்பது கூடும்.

❖ சாட்சியாளர் பருவ வயதை அடைந்தவராக இருக்க வேண்டும்.

❖ சுதந்திரமானவராக இருத்தல்.

❖ முஸ்லிமாக இருத்தல். (துர்ருல் முத்தார்)

(மஸாயில் நிகாஹ் வஅஹ்காமுத்தலாக் பக் : 54

❖ விபச்சாரத்தில் இட்டுக்கட்டுப்பட்டு தண்டனை பெற்றவனின் சாட்சியைக் கொண்டும் நிகாஹ் கூடிவிடும்.

(முக்தஸருல் குதூரி பக் : 157)

❖ திருமணம் நடைபெறும் போது ஈஜாப், கபூல் கேட்கும் நேரத்தில் சாட்சியாளர்கள் முன்னிலையில் இருந்து ஈஜாப், கபூல் கேட்பதை காதால் கேட்க வேண்டும்.

❖ ஆணில்லாமல் பெண்கள் மட்டும் சாட்சியாளராக இருந்து திருமணம் முடிப்பது கூடாது.

நூல் : ஆலம்கீரி, மஸாயில் நிகாஹ் வஅஹ்காமுத்தலாக் பக் : 54

சாட்சிக்கு தகுதியற்றவர்கள் :

❖ பைத்தியக்காரர்

❖ பருவ வயதை அடையாத சிறுவர் அவர் விளங்கக்கூடியவராக இருந்தாலும் சரியே.

❖ அடிமைகள்

❖ செவிடர்கள், தூங்கக்கூடியவர்

❖ போதையிலிருப்பவர்

மஹ்ரின் சட்டங்கள்

❖ கணவன் மனைவிக்கு திருமணத்தின் போது வழங்கும் 'கட்டாய கொடை'க்கு மஹ்ரு என்று கூறப்படும்.

❖ மஹ்ர் மித்லு என்றால் என்ன?

மஹ்ர் மித்லு என்பது மனைவியின் சகோதரி, குப்பி, சிறிய தந்தை, பெரிய தந்தையின் மகள்களுக்கு கொடுக்கப்பட்ட அளவாகும்.

❖ திருமணத்தில் 10 திர்ஹம் குறிப்பிட்டு அதைவிட கூடுதலாக கொடுப்பதும் கூடும்.

❖ திருமணம் முடிந்ததிலிருந்து மஹ்ரே கொடுக்காமலிருந்து கணவன் மரணமாகிவிட்டால் கணவனின் சொத்திலிருந்து மஹ்ரை எடுத்து மனைவிக்கு கொடுத்து விட்டுத்தான் சொத்தை வாரிசுதாரர்களுக்கு பங்கீடு செய்ய வேண்டும்.

❖ மஹ்ரு குறிப்பிடாமல் திருமணம் முடித்தால் (அல்லது) மஹ்ரே இல்லை என்று கூறி திருமணம் முடித்தால் மஹ்ரு மித்ல் கொடுப்பது அவசியம்.

❖ மஹ்ரு குறிப்பிட்டு திருமணம் முடித்த பிறகு கணவன் மனைவியும் சேர்ந்து பேசி முடித்த மஹ்ரை விட குறைத்துக் கொள்ளலாம் என்றோ, அல்லது அதிகப் படுத்திக் கொள்ளலாம் என்றோ அல்லது மஹ்ரே வேண்டாம் என்றோ முடிவு செய்தால் அவ்வாறு செய்வது கூடும். ஏனெனில் அது மனைவியின் உரிமையாகும்.

மஹ்ருடைய விளக்கம்

கணவன் மனைவிக்கு மஹ்ரு கொடுப்பது அவசியமாகும். மஹ்ரு இல்லாமல் திருமணம் முடித்தால் நிகாஹ் கூடிவிடும். ஆனால் பெரும் பாவமாகும். மஹ்ர் இல்லாமல் வாழ்க்கை நடத்துபவன் மறுமையில் விபச்சாரனாக இறைவனை சந்திப்பான் என்று நபி ஸல் அவர்கள் அருளியுள்ளார்கள்.

(ஆதாரம் : தப்ரானீ)

மஹ்ர் உடைய குறைந்த அளவு 10 திர்ஹம் ஆகும். 10 திர்ஹம் என்பது 30 கிராம் 620 மி.கிராம் வெள்ளியாகும். திருமண நாளில் இதன் கிரயம் மார்கெட்டில் எவ்வளவோ அதைத் தர வேண்டும். தவணையாக (தாமதமாக)வும் கொடுக்கலாம்.

அதிக மஹ்ருக்கு அளவு நிர்ணயம் இல்லை. நபி பெருமானார் ஸல் அவர்கள் ஹள்ரத் உம்மு ஹபீபா (ரளி) அவர்களை நிகாஹ் செய்த போது 4000 திர்ஹம் கொடுக்கப்பட்டது. ஹள்ரத் பாத்திமா ரளி அவர்களுக்கு ஏறக்குறைய 500 திர்ஹம் (500x3.6 = 1530 கிராம்) வெள்ளியை மஹ்ராக கொடுக்கப்பட்டது.

மனைவி மனப்பூர்வமாக மஹ்ரை மன்னிக்கவும் உரிமை உண்டு.

சீதனம்

புதிதாக மணமுடிக்கும் பெண்ணுக்கு அவருடைய பெற்றோர்கள் வசதிக்கு ஏற்ப சீதனம் கொடுப்பது தவறல்ல. அப்படி பெண்ணின் நலன் கருதி சீர்வரிசை கொடுத்தால் அது மனைவிக்குத் தான் சொந்தம்.

(பக் : 105)

❖ திருமணத்திற்கு முன்பு கணவன் தன் மனைவிக்கு மஹரும் திருமணத்திற்கு பின்பு மனைவிக்கு தேவையான எல்லா செலவினங்களையும் அவனே செய்ய வேண்டும். இதை தவிர எந்த சீதனமும், எந்த பணமும் கேட்டு வாங்குவது ஹராமாகும். பெண்ணிடமிருந்து ஏதேனும் பொருளை வாங்கினால் அவை லஞ்சமாகும் என்று அல்லாமா ஜெய்னுத்தீன் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

நூல் : அல்பஹ்ருர் ராயிக் பக் : 200; பா : 2.

❖ நபி (ஸல்) தங்களின் மகள் அன்னை பாத்திமா (ரளி)யை அலி (ரளி)க்கு திருமணம் செய்து கொடுத்த பொழுது போர்வை, தலையனை மற்றும் குடம் ஆகியவை கொடுத்தனுப்பினார்கள். (நூல் : நஸயீ) என்ற ஹதீஸை வைத்து நபி (ஸல்) அவர்கள் சீதனம் கொடுத்துள்ளார்கள் என்று நம்மில் ஏராளமானோர் சீதனம் கொடுப்பதை கடமை என்று எண்ணிக் கொண்டுள்ளனர். இவை முற்றிலும் தவறு. காரணம் சீதனம் கடமை என்றிருந்தால் நபி (ஸல்) இவர்கள் மற்ற மூன்று மகள்களுக்கும் திருமணம் செய்து கொடுத்த பொழுது சீதனம் கொடுத்திருப்பார்கள். ஆனால் அப்படி கொடுத்தாக எந்த ஹதீஸிலும் ஆதாரம் கிடையாது. மேலும் அரபியர்களிடத்தில் சீதனம் என்ற வார்த்தை புழக்கத்திலேயே

இல்லை. மேலும் அலி (ரளி)க்கு நபி (ஸல்) அவர்கள் கொடுத்ததற்கு காரணம் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து நபி (ஸல்) அவர்களிடமே வளர்ந்து வந்தார். எனவே அவர்களின் தேவையை நபி (ஸல்) அவர்கள் பூர்த்தி செய்தார்கள்.

❖ கணவன் தன்மனைவிக்கு உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மஹ்ர் கொடுப்பது தான் வாஜிபாகும். இவைகளைத் தவிர நகை சீர்வரிசை போன்றவை கொடுப்பதற்கு மார்க்கம் அவசியமாக்கவில்லை. மனைவி தன்னோடு வந்தப்பின்பு தான் பிரியப்பட்டு தன்மனைவிக்கு நகை அல்லது பணம் கொடுப்பது கூடும். ஆனால் பெண்ணின் தந்தையோ அல்லது பெண்ணைச் சார்ந்தவர்களோ எதையும் கேட்பது கூடாது. மேலும் கடனாக பணம் வாங்குவதும், மனைவியின் தந்தைக்கு கொடுப்பதும் அல்லது தானே கணவனிடம் வாங்குவதும் கூடாது. (பக் : 108).

மணமகன் கேட்காமல் பெண்ணின் பெற்றோரே விரும்பி மணமகனுக்கு கொடுப்பதும், வாங்குவதும் மார்க்கத்தில் தடையல்ல. இவை நற்செயலாக இருப்பதால் இவைகளுக்கு கூலியுண்டு.

(நூல் : அல்வஸீலதுல்முஹம்மதிய்யா)

இஸ்லாத்தின் பார்வையில் வரதட்சனை

வரதட்சனை வாங்கும்படி பெற்றோர் வற்புறுத்துகிறார்கள். பெற்றோருக்கு கட்டுப்பட வேண்டும். தாய் சொல்லை தட்டக்கூடாது என்பதால் தான் வேறு வழியின்றி வரதட்சனை வாங்குகிறோம் என்று சொல்லும் ஆண்களும் உண்டு.

இது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத சொத்தை வாதமாகும். ஏனெனில் பெற்றோருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்பது பாவமில்லாத காரியங்களில் தான். பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று (31:14) என்ற வசனத்தில் மிகவும் வலியுறுத்தி கூறிய அதே அல்லாஹ் தான் அடுத்த வசனத்தில் நீ அறியாததை என்னோடு நீ இணை கற்பிக்க வேண்டுமென்று (பெற்றோர்) இருவரும் உன்னை நிர்ப்பந்தித்தால் அவர்களின் பேச்சை ஒரு போதும் ஏற்காதே! உலகியல் விஷயத்தில் அவர்களுடன் நல்ல முறையில் நீ நடந்துக் கொள் (31:15) என்று குறிப்பிடுகிறான்.

உண்மையில் வரதட்சனை சாபக்கேடான, சமுதாயக்கேடான

மானக்கேடான காரியம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை திருமணம் நடக்க காலதாமதம் ஆனதால் பல இளம் பெண்கள் தனது உடல் பசியை தீர்ப்பதற்காக யாருடனாவது ஓடி விடுகிறார்கள். சில இளம் பெண்கள் திருமணமாகாமலேயே கிழவியாகி விடுகிறார்கள். இதைத் தான் நபி (ஸல்) அவர்கள் வயது வந்ததும் திருமணமாகாது தவிக்கும் குமரிப்பெண் விடும் உஷ்னமூச்சு அல்லாஹ்வின் அர்ஷை நடுங்கச் செய்கிறது என்றார்கள்.

இன்று எத்தனையோ கோடி உஷ்ணப் பெருமூச்சுகள் சீறிக்கிழம்புகின்றன. எத்தனையோ கோடி நெஞ்சங்கள் விம்மி, விம்மி அழுகின்றன. எத்தனையோ கோடிக்கண்கள் செந்நீர் வடிக்கின்றன. இதன் பாதிப்பு ஒட்டு மொத்த சமூதாயத்தைச் சாரும். இந்த சாபத்தை இந்த சமூதாயத்திற்கு வாங்கித் தந்தது இந்த வரதட்சனை தான். எனவே இதை நாம் சாபக்கேடு என்கிறோம்.

எதற்காக ஆண்கள் வரதட்சனை வாங்க வேண்டும்?

பசி எடுத்தால் பணம் கொடுத்து பண்டம் சாப்பிடுவது மனிதாபிமானமா? பண்டம் எடுத்து சாப்பிட்டு விட்டு அவனிடமே பணமும் கேட்பது மனிதாபிமானமா? இது போல உன் காமபசிக்காக பெண்ணை அனுபவிக்க அவளிடமே கூலி கேட்பது கூறு கெட்ட தனமில்லையா? எனவே மஹர் கொடுத்து மணம் முடிப்பதே மகத்தான வெற்றியை ஈற்றுத் தரும் என்பதை மனதில் பதிய வைக்க வேண்டும்.

தாய் சொல்லி விட்டார்; தந்தை வற்புறுத்துகிறார் என்று கூறி வரதட்சனை போன்ற பெரும் பாவங்களை நியாயப் படுத்துவது மேற் சொன்ன திருக்குர்ஆன் வசனத்திற்கும் நபி வழிக்கும் மாற்றமாகும். ஆகவே, இவ்வாறு நியாயப்படுத்துபவர்கள் பின்வரும் வசனத்தை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளட்டுமாக! யார் எனது நல்லுபதேசத்தைப் புறக்கனிப்பாரோ அவரது வாழ்க்கை நிச்சயமாக நெருக்கடியானதாகவே இருக்கும். மறுமை நாளில் நம் அவனை குருடனாகவே எழுப்புவோம்.

குருடனாக மறுமையில் எழுப்பப்படும் போது அவன் என் இறைவனே! நீ என்னைக் குருடனாக ஏன் எழுப்பினாய்? நான் (உலகில்) பார்வையுடையோனாக இருந்தேனே என்று கேட்பான்.

அதற்கு அல்லாஹ் குருடனைப் போன்றே உன் காரியங்கள் இருந்தன நம் வசனங்கள் உன்னிடம் வந்தன.நீ அவைகளை (அலட்சியப்படுத்தி) மறந்து விட்டாய். அவ்வாறே இன்றைய தினம் நீயும் (கவனிக்கப்படாது) மறக்கப்பட்டு விட்டாய் என்று அல்லாஹு கூறுவான். (20:124)

❖ இலஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் ஹராம் ஆகும். வரதட்சினையும் ஒரு வகையில் இலஞ்சமே! எனவே ஹராம் ஆகும்.

❖ யாசகம் கேட்பது ஹராம் ஆகும். வரதட்சனையும் ஒரு வகையில் கௌரவ யாசகமே! எனவே ஹராம் ஆகும்.

❖ மணமகனின் வீட்டார் எதையும் கேட்காமலேயே மணமகளின் வீட்டார் வரதட்சனை தருகிறார்கள். இதை பெற்றுக் கொள்ள அனுமதியுண்டு என சிலர் வாதிக்கின்றனர். இது தவறான வாதமாகும். ஏனெனில் ஒரு மனிதன் ஒரு செல்வந்தரின் வீட்டில் திருமணம் செய்கிறான். நாம் கேட்காமல் இருந்தாலும் அந்த செல்வந்தர் தனது கௌரவத்தை நிலை நிறுத்த கண்டிப்பாக வரதட்சனை தருவார் என்ற நோக்கில் திருமண ஏற்பாடுகள் நடந்து அதே போன்று அந்த செல்வந்தரும் வரதட்சினை தந்து விட்டால். இப்போது இதை வாங்குவதும் ஹராம் தான்.

திருமணத்திற்கு தாடி தடையா?

திருமணத்திற்கு தாடி தடையா?

தாடி எல்லா நபிமார்களின் பொதுவான சுன்னத்தாக இருக்கிறது. தாடி இஸ்லாத்தின் அடையாளமாக இருக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் தாடியைப் பற்றி நிறைய சட்டங்களை கூறியுள்ளார்கள். தாடியை சிரைப்பவர் மீது நபி (ஸல்) அவர்கள் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதை வைத்து தாடி வளர்ப்பது "ஒருமித்தகருத்தபடி" "வாஜிப்" ஆக இருக்கிறது.

ஒரு பிடியை விட குறைவாக உள்ள தாடியை குறைப்பது "ஒரு மித்த கருத்துபடி" ஹராமாகவும். பெரும்பாவமாகவும் உள்ளது.

எந்த மக்கள் தாடியை வெறுக்கிறார்களோ அவர்கள் தாடியை சிரைப்பதை திருமணத்திற்கு நிபந்தனையாக வைத்துள்ளார்கள். தாடியை சிரைப்பது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்கும், இஸ்லாத்தின் அடையாளத்திற்கும் இழிவாக இருப்பதால் அவர் பரிபூரண ஈமானிலிருந்து வெளியேறி விடுகிறார். திருமணத்தில் தாடியை சிறைப்பதின் சிந்தனையெல்லாம் இருக்கக் கூடாது.

நூல் : ஆப்கே மஸாயில் அவ்ர் உன்காஹல் பாகம் :7, பக்கம் : 12

❖ தாடியை சிரைப்பதில் பெண்களுக்கு ஒப்பாகுதல் ஏற்படுகிறது.

❖ ஒரு ஆண், பெண்ணுக்கு ஒப்பாகுவதை நபியவர்கள் சபித்துள்ளார்கள்.

தாடியை குறைக்கலாமா?

தாடியை சிரைப்பது முஷ்ரிகீன்களுடைய நடைமுறையும். பழக்கமுமாகும், முஸ்லிம்கள் அதற்கு மாறு செய்ய வேண்டும் என்ற விஷயம் பல ஹதீஸ்கள் மூலம் வற்புறுத்தபட்டுள்ளது. அநேகர்கள் தாடியைச் சிரைப்பதைப் பழிப்பிற்குரியதாகக் கருதுகின்றனர். ஆனால் தாடியைக் குறைப்பதை பழிப்பிற்குரியதாகக் கருதுவதில்லை. தாடி வைக்க வேண்டும் என்ற சட்டம் இருப்பது போன்று எந்த அளவு இருக்க வேண்டும் என்பதையும் மார்க்கம் கூறி உள்ளது. அந்த அளவை விட குறைத்தால் அது தாடி வைத்ததாக ஆகாது. மார்க்கத்தில் குறிப்பிடப்பட்ட அளவு ஒரு கைப்பிடியாகும். இதைவிட குறைப்பது ஹராம் என்று ஏகோபித்து கூறியுள்ளனர். இதை விட அதிகமானதை குறைப்பது குற்றமில்லை.

புகாரீ (ரஹ்) தங்களின் புகாரீ கிதாபில் ரிவாயத் செய்துள்ளார்கள். இப்னு உமர் (ரளி) அவர்கள் ஹஜ்ஜோ உம்ராவோ செய்தால் அப்போது தமது தாடியை ஒரு பிடி அளவு பிடித்துக் கொண்டு அதிகமுள்ளதை வெட்டி விடுவார்கள்.

❖ ஹனபி மத்ஹபில் ஒரு பிடியை விட அதிகமாக வளர்ந்த தாடியை வெட்டுவது முஸ்தஹப்பாகும்.

❖ நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் : முஷ்ரிகீன்களுக்கு நீங்கள் மாற்றம் செய்யுங்கள் தாடியை வளருங்கள். மீசையை நன்றாக வெட்டி விடுங்கள். அறிவிப்பாளர் : இப்னு உமர் ரளி

❖ லூத் வமிசத்தினரிடம் இருந்து வந்த பத்து இழி செயல்களின் காரணத்தாலேயே அவர்கள் பூண்டோடு அழித்தொழிக்கப்பட்டனர். (அவற்றில் தாடியைச் சிரைப்பதும் மீசையை வளர்ப்பது பற்றியும் குறிப்பிடபட்டுள்ளது).

ஹஜரத் ஹஸன் (ரளி) நூல் : இப்னு அஸாகிர்

❖ நான்கு இமாம்களான அபூஹனீபா (ரஹ்) ஷாபியீ (ரஹ்) மாலிக் (ரஹ்) அஹ்மத் (ரஹ்) ஆகியோரிடம் தாடியைச் சிரைப்பது ஹராமாகக் கருதப்பட்டுள்ளது. நூல் : உஜூபுல் லிஹ்யத்

❖ குழப்பவாதிகளில் சிலர் தாடி வைப்பதை 'சுன்னத் ஜவாயித்' (வைத்தால் நல்லது, வைக்காவிட்டால் தவறில்லை) என்று கூறுகின்றனர். இதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. தாடி வைப்பது வாஜிபு என்பது தான் சரியான சட்டமாகும்.

ஒட்டு முடி வைக்கலாமா?

இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்; ஒட்டுமுடி வைத்து விடுபவளையும் வைத்தவளையும் பச்சை குத்தி விடுபவளையும் குத்துபவளையும் அல்லாஹ் சபிக்கின்றான்.

மிஷ்காத் : 381

இமாம் நவவீ (ரஹ்) சொன்னார்கள் ஒட்டுமுடி வைத்தல் "ஹராம்" ஆகும். ஏனெனில் ஷாபிஈ (ரஹ்) அவர்களிடத்தில் எவ்வித கருத்து வேறுபாடுமில்லாமல் ஒட்டுமுடி வைத்தல் "ஹராம்" ஆகும். ஏனெனில் மற்றவரின் உடம்பிலிருந்து ஒரு பகுதியைக் கொண்டு பயன் அடைவது "ஹராம்" ஆகும்.

❖ மனிதன் தவிர மற்ற மிருகங்களின் முடியைக் கொண்டு ஒட்டுமுடி வைப்பதின் சட்டம் என்னவெனில் அவளுக்கு கணவன் இல்லையெனில் ஒட்டு முடி வைப்பது "ஹராம்" ஆகும்.

❖ அவளுக்கு கணவன் இருந்தால் அவனது அனுமதியை கொண்டு மிருகங்களின் முடியை வைப்பது ஆகுமாக்கப்பட்டுள்ளது.

❖ பதாவா ஆலம்கீரியில் எழுதப்பட்டுள்ளதாவது; தலையில் மனித முடியை வைப்பது "ஹராம்" ஆகும். மிருகங்களின் முடியை வைப்பது ஆகுமாக்குபட்டுள்ளது.

நூற்கள் : மளாஹிருல் ஹக், ஜதீத் பிக்ஹீ மஸாயில் பக் : 205

ஆல்கஹால் கலந்த சென்ட் அடிக்கலாமா?

❖ ஆல்கஹால் (மதுசாரம்) என்பது தெளிவான ஆய்வின்படி போதை தரக்கூடிய பொருளாக இருக்கிறது.

❖ ஆல்கஹால் சாப்பிடுதல், குடித்தல் போன்றவைகளில் கலந்து இருந்தால் அதுவும் "ஹராம்" ஆகும். இதனால் ஆல்கஹால் கலந்த சென்ட் பூசுவது அனுமதிக்கப்பட்டதாக இல்லை.

❖ ஆல்கஹால் ஆடையிலோ, உடம்பிலோ பட்டுவிட்டால் அதை சுத்தப்படுத்துவதும், கழுவுவதும் அவசியமாகும்.

❖ ஆல்கஹால் கலந்த மருந்தை நிர்பந்தம் என்ற நேரத்தில் பயன் படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளது.

நூல் : ஹலால் வஹறாம் பக் : 169

மருதாணி பூசுதல் :

பெண்கள் அலங்காரப் பொருட்களை அதிகமாக பயன்படுத்துகிறார்கள். இதனால் பெண்களுக்கு கைகளிலும், கால்களிலும் மருதாணி பூசுவது அனுமதிக்கப்பட்டுள்ளது.

❖ ஆண்களில் சிறுவர்களாக இருந்தாலும் மருதானி பூசுவது அனுமதிக்கப்படவில்லை.

நூல் : ஹலால் வஹறாம் பக் : 209

❖ பெண்கள் கை, கால்களுக்கு மருதானி பூசுவது “முஸ்தஹப்” ஆகும்.

❖ நரை முடிக்கு சிவப்பு மருதாணி பூசுவது சுன்னத்தாகும்.

❖ நரைமுடிக்கு கருப்புச்சாயம் பூசுவது தடுக்கப்பட்ட செயலாகும்.

❖ போர் வீரர்கள் போரின் சமயத்தில் கருப்புச்சாயம் பூசுவது கூடும்.

நூல் : ஃபதாவா ஹிந்திய்யா பாகம் : 5 பக்கம் ; 359

❖ மருதாணி என்ற பெயரில் உள்ள கருப்புச்சாயமும் பூசக்கூடாது.

நகப்பாலிஷ், லிப்ஸ்டிக் :

❖ உடலில் தண்ணீர் சேர்வதை தடுக்க கூடிய ஒவ்வொன்றையும் நகத்தில் பூசுவதற்கு அனுமதி இல்லை.

நூல் : கவாதீன்கே மக்ஃஸூஸ் மஸாயில் பக் : 31

❖ நகப்பாலிஷ், நகத்தில் தண்ணீர் சேர்வதை தடுக்கம் பொருள். இது பெயிண்ட் வகையைச் சார்ந்ததாகும்.

❖ உளூவில் தண்ணீர் சேர்வதை தடுக்கக்கூடிய பொருட்களை பயன் படுத்துவது தடுக்கப்பட்டுள்ளது. (இதில் நகப்பாலிஷ், லிப்ஸ்டிக் சேரும்)

நூல் : ஹலால் வஹறாம் பக் : 209

❖ பெண்கள் கருப்பு சுர்மா பயன்படுத்துவது அனுமதிக் கப்பட்டுள்ளது.

❖ ஆண்கள் வெள்ளை சுர்மா பயன்படுத்துவது மிகச் சிறந்ததாக இருக்கிறது. கருப்பு சுர்மாவை அழகை நாடாமல் பயன்படுத்தலாம்.

❖ அழகை நாடி ஆண்கள் கருப்பு சுர்மாவை பயன்படுத்துவது "மக்ரூஹ்" ஆகும்.

நூல் : ஹலால் வஹராம் பக் : 209.

பெண்கள் பூ மற்றும் கொலுசு அணியலாமா?

❖ அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான் :

தங்களுடைய அலங்காரத்தில் மறைந்திருப்பதை அறிவிக்க (நிலத்தில்) தங்கள் கால்களைத் தட்டி தட்டி நடக்க வேண்டாம்.
(அல்குர்ஆன் 24:31)

❖ நறுமணமும், சலங்கை ஒலியும் அந்நிய ஆண்களின் உள்ளங்களைக் கவர்ந்திழுக்கும் சாதனங்களில் முதன்மையாகத் திகழ்கின்றன.

❖ பெண்களுக்கு ஆபரணங்களிலிருந்து தங்கம், வெள்ளி, கழுத்துமாலை, மோதிரம், கொலுசு போன்றவற்றை அணிய அனுமதி உண்டு. ஆதாரம் : அஹ்ஸனுல் ஃபதாவா பக் : 72

❖ இப்னு ஜுபைர் (ரளி) அறிவிக்கின்றார்கள் :

எங்களால் உரிமை விடப்பெற்ற ஒரு பெண்மணி ஜுபைர் ரளி - அவர்களின் ஒரு பெண் குழந்தையை அழைத்துக் கொண்டு உமர் ஃபாரூக் (ரளி) அவர்களிடம் சென்றார்கள். அப்போது அந்தப் பெண் குழந்தையின் காலில் (ஒலி எழுப்பும்) சலங்கை மணிகள் இருந்தன. அந்தச் சலங்கை மணிகளை உமர் ஃபாரூக் (ரளி) அவர்கள் துண்டித்து விட்டார்கள். பின்னர் கூறினார்கள். நான் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு சலங்கை மணியுடனும் ஷைத்தான் உள்ளான்.

❖ நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

சலங்கை மணிகள் ஷைத்தானின் இசைக் கருவிகளில் ஒன்றாகும்.

❖ பெண்கள் கால்பட்டியோ (அ) பிற ஆபரணங்களோ அணிந்தால் அவைகளில் ஒலி எழுப்பும் சலங்கை மணிகள் சேர்க்கப்படாமல் அணிய

வேண்டும். சலங்கை மணிகளைச் சேர்த்து அணிவது மார்க்கத்தில் விலக்கப்பட்டதாகும். இதே போல தங்களின் பெண் குழந்தைகளுக்கும் கால்பட்டியோ (அ) வேறு ஆபரணங்களோ அணிவித்தால் அவற்றில் சலங்கை மணிகள் இல்லாமல் அணிவிக்க வேண்டும்.

❖ நபி (ஸல்) கூறியதாக அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆண்களின் வாசனைத் திரவியமாகிறது. அதன் மனம் வெளியாகி நிறம் மறைந்திருப்பதாகும். பெண்களின் நறுமணமாகிறது. அதன் நிறம் வெளியாகி மணம் மறைந்திருப்பதாகும்.

பியூட்டி பார்லர் செல்வதால் ஏற்படும் தீய விளைவுகள்

❖ பெண்கள் தனது கணவன்மார்களை சந்தோஷப் படுத்துவதற்காக தேவையான அலங்காரத்தை வீட்டில் இருந்த நிலையிலேயே செய்ய அனுமதியுண்டு. ஆயினும் 'பியூட்டி பார்லர்' (பெண்கள் அழகு நிலையம்) செல்கின்ற போது கீழ்கண்ட முறைகேடுகள் உருவாகின்றது.

❖ ஆண் / பெண் கலப்பு ஏற்படுகிறது.

❖ பெண்ணை ஆணைப்போன்று முடி அலங்காரத்தில் ஒப்பிடுதல் ஏற்படுகிறது.

❖ பொருள் வீண் விரயம் ஏற்படுகிறது.

❖ தேவையில்லாத விஷயங்களுக்காக பெண் வீட்டை விட்டும் வெளியேறுதல் என்பது ஏற்படுகிறது.

❖ பெண்களின் இயற்கையான முடிஅலங்காரத்திற்கு மாற்றம் செய்தல் ஏற்படுகிறது.

❖ மேலை நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்றுதல் வருகிறது.

இக்காரணங்களால் பெண்கள் அழகு நிலையம் சென்று முடி அலங்காரத்தில் ஈடுபடுவதை 'ஹராம்' என உலமாக்கள் தீர்ப்பெழுதியுள்ளனர்.

மணமக்கள் ஊர்வலம்

தஃப் அடித்தல்

திருமணத்தின் போது தஃப் அடித்தலும் பொய் இல்லா கவிபாடுவதும் கூடும். இது தவிர மற்ற கருவிகளை வைத்து இசைப்பது கூடாது.

❖ திருமணத்திலே மணமக்களை ஊர்வலமாக அழைத்துச் செல்வது அவசியமில்லாததை அவசியமாக்கி வைப்பதாகும். எனவே இவ்வாறு செய்வது பித்அத் ஆகும்.

(ஃபதாவா மஹ்மூதிய்யா பாகம் : 12 பக் : 197)

❖ திருமண சபைக்கு வரும் முன் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளில் மணமகனை ஊர்வலமாக அழைத்து வருதலும் ஒன்றாகும். இன்றைய திருமணங்களில் கார் ஊர்வலம், யானை ஊர்வலம், குதிரை ஊர்வலம் என்றெல்லாம் ஊர் ஊருக்கு வித்தியாசமாக நடைபெற்று வருகிறது.

இந்த ஊர்வலங்கள் வீண் விரையமே! வீண் விரயம் செய்யும் நபர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்குரியவர்களே! "வீண் விரயம் செய்யாதீர்கள். நிச்சயமாக அவன் வீண் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை". (அல்குர்ஆன் 6:14)

நல்ல நேரம் பார்த்தல்

❖ ஆடி மாதத்தில் திருமணம் முடிப்பது கூடாது என்று மாற்றார்கள் கூறுவது போன்று முஹர்ரம், ஸபர் மாதங்களில் திருமணம் முடிப்பது கூடாது என்று கூறும் முஸ்லிம்களும் உண்டு. இதற்கு விதவிதமான காரணங்கள் கூறுவதுண்டு. இதே போல் அரபியர்கள் ஷவ்வால் மாதத்தை குறையாகக் கருதினார்கள். அந்த காலத்தில் நல்ல செயல் என எதையும் அவர்கள் செய்வதில்லை.

❖ இது பற்றி ஆயிஷா (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் :

நபி (ஸல்) அவர்கள் என்னை திருமணம் செய்தது ஷவ்வால் மாதம் தான். என்னிடம் உடலுறவில் ஈடுபட்டதும் ஷவ்வால் மாதம் தான். நபி (ஸல்) அவர்களுக்கு என்னை விட மிக விருப்பமான மனைவியாக யார்? இருந்தது.

❖ ஆதமின் மக்கள் காலத்தைத் திட்டுகின்றனர். (கெட்டகாலம் எனக் கூறுகின்றனர்) நானே காலமாக (காலத்தை இயக்குபவனாக) இருக்கிறேன். என் கையில் (நிர்வாகத்தில்) தான் இரவும், பகலும், (மாறிவருவது) உள்ளது என்று அல்லாஹ் கூறினான் என நபி (ஸல்) கூறியதாக அபூஹுரைரா (ரளி) அறிவிக்கின்றார்கள்.

பள்ளிவாசலில் தான் திருமணம் நடத்த வேண்டுமா?

(ஓர்) ஊரில் அல்லாஹ்வுக்கு மிகப்பிரியமானது பள்ளிவாசல்கள், மிக வெறுப்பானது கடை வீதிகள். நூல் : மிஷ்காத்; பக் : 68

நம் வீடு, மண்டபங்களை விட திருமணம் நடத்த சிறந்த இடம் பள்ளிவாசல்களாகும். பள்ளிவாசல்கள் அல்லாஹ்வின் அருள் இறங்கும் இடங்களாகும். மஸ்ஜிதில் திருமணங்களை நடத்துவதால் பல ஹராமான காரியங்களிலிருந்து தப்ப முடிகிறது.

போட்டோ எடுக்க முடியாது.

வீடியோ பிடிக்க முடியாது.

பெண்கள் வர முடியாது.

குடி போதையில் யாரும் நுழைய முடியாது. இப்படி பல நன்மைகள் உண்டு. நூல் : மார்க்கச்சட்டங்கள்; பக் : 185.

❖ திருமணங்கள் நடத்துவதற்காக மஸ்ஜிதின் மேல் கட்டிடங்களைக் கட்டி வாடகைக்கு விடுவது கூடாது.

❖ பள்ளியில் திருமணம் நடத்தும் போது பள்ளியின் கண்ணியத்திற்கு களங்கம் ஏற்படுமென்றிருப்பின் வெளியே திருமணம் நடத்துவது தான் சாலச்சிறந்தது.

இன்றைய திருமணக் கலாச்சாரங்கள் ஒரு பார்வை

திருமணத்தில் வீடியோ :

பல திருமண வைபவங்களை "மலரும் நினைவுகளாய் இருக்கட்டும் என்று கூறிக் கொண்டு போட்டோ எடுப்பதும், வீடியோ எடுப்பதும் நிதர்சன நிகழ்வுகளாய் மாறிவிட்டன. மணப்பெண் உடை உடுத்துவதிலிருந்து சமையல் அரைக்காட்சிகள் வரை அனைத்தும் வீடியோ படமாக்கப்படுகிறது.

மணப்பெண்ணை முதன் முதலாக பார்ப்பது வீடியோ எடுக்கும் ஓர் அன்னிய ஆண் தான். ஒரு பெண்ணை அன்னிய ஆண் பார்க்க தடையாக இருக்கும் நிலையில் புதுப்பெண்ணை அலங்கரித்து உடல் முழுவதையும் நூற்றுக்கணக்கான அன்னிய ஆண்களின் கண்களுக்கு விருந்து படைப்பது எவ்வளவு பெரிய கேவலம்! வெட்கத்திற்கு அப்பாற்பட்ட செயல் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும். மணமகன் மற்றும் மணமகள் தலையில் எண்ணெய் தேய்ப்பதிலிருந்து குளிப்பதற்கு செல்லும் வரை படமாக்கப்படுகிறது.

இவ்வாறான வீடியோ படங்களை பார்த்து ரசித்ததன் விளைவாய் பல்வேறு தலாக் சம்பவங்களும் நடந்துள்ளன. பெண்ணை பெற்றோர் இதனை கவனத்தில் கொண்டு வீடியோ, போட்டோக்களுக்கு முடிவு கட்டுவார்களா?

கியாமத் நாளில் அல்லாஹ்விடம் கொடும் வேதனைக்குரியவர் உருவப்படங்களை தீட்டுபவராகும்.

நூல் : புகாரீ, முஸ்லிம். மிஷ்காத் : பக் : 385

வீடியோ படங்கள் எடுப்பதும் போட்டோவைப் போன்றே உருவப்படங்களில் கட்டுப்படும். அவற்றை எடுப்பதும், காலங்காலமாக நினைவு எனும் பெயரில் பத்திரப்படுத்துவது, இறைவனது வெறுப்பிற்கு நம்மை ஆளாக்கும். இறைவனின் கோபமும் நம்மை வந்தடையும். இத்தகு திருமணங்கள் குடும்பச் சீரழிவை மட்டுமே கொண்டு வந்து சேர்க்கும். எனவே இவற்றை விட்டும் நாம் தவ்பா செய்து மீள்வது அவசியம்.

நூல் : ஆப்கேமஸாயில் பாகம் : 8 பக் : 133

பதாவா ரஹீமிய்யா பாகம் : 6 பக் : 271

மொய் வைத்தல் :

மொய் வைத்தல் எனும் பெயரால் இன்றைக்கு திருமண நிகழ்வுகளிலும், கத்னா செய்யப்படும் போதும், பெண் பருவ வயதடையும் போதும், குழந்தை பிறப்பின் போதும். இன்ன பிற நிகழ்வுகளிலும் அதனை வழமையாக்கிக் கொண்டோம். மார்க்க ரீதியில் இதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை என்பது தெள்ளத் தெளிவு.

குழந்தைகள் பிறப்பின் விஷயத்தில் மட்டும் அதற்கு அன்பளிப்பு செய்வது பெரியார்கள் முன்னோர்களின் வழக்கத்தில் கட்டுப்பட்டது. இருப்பினும் அதனை ஃபர்ளு, வாஜிப் போன்று கட்டாயமெனக் கருதுவதும், குழந்தைக்கு வைக்கப்படும் மொய் பணத்தை வைத்து அவற்றின் எதிர் காலத்தையோ, நற்பாக்கியம், துர்பாக்கியத்தையோ தீர்மானிப்பது என்பது மவுட்டீகத்தின் உச்சகட்டம் என்பதையும் நினைவில் கொள்க!

நூல் : ஆப்கே மஸாயில்; பாகம் : 8; பக் : 141

இந்த மொய் வைத்தல், கொடுக்கல், வாங்கலில் உதவி செய்தல்

எனும் அடிப்படையிலும், அடுத்தவருக்கு காட்டுவதற்காக பகட்டுக்காக இன்றி கொடுக்கப்பட்டால் அது கூடும். ஷரீஅத்படி நல்வழக்கமே. ஆனால், இன்று இது வழமை எனும் அடிப்படையில் கொடுக்கப்படு வதால் தன்னிடம் இல்லாத போது அடுத்தவரிடம் கடன் வாங்கியாவது, மனமின்றி கொடுக்கப்படுவதால் இவை தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

நூல் : மஸாயிலே நிகாஹ்; பாகம் : 109;

ஃபதாவா மஹ்மூதிய்யா; பாகம் : 8; பக் : 28

தான் செய்த மொய்யை திரும்பவும் அவர்கள் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பதும், அந்த நோக்கத்தில் மொய் வைப்பதும் நல்லதல்ல.

❖ மொய் வைக்காதவர்கள் மீது வருத்தப்படுவதும் நல்லதல்ல.

திருமண அழைப்பிதழ்கள்

திருமண அழைப்பிதழ்கள் அவசியம் கொடுக்க வேண்டுமென்றிருப்பின் அழைப்பிதழ்களை அச்சிட்டோ, கையால் எழுதி ஜெராக்ஸ் எடுத்தோ குறைந்த செலவில் கொடுக்கலாம்.

❖ ஆனால் விலையுயர்ந்த பத்ரிக்கைகளை வினியோகம் செய்வது வீண் விரயமான செயலாகும். மேலும் அவைகளின் மீது மஞ்சள் தடவுவது போன்றவை முற்றிலும் விலக்கப்பட வேண்டிய மாற்று மதத் தழுவல்களாகும்.

பந்தல் & அலங்காரம் :

❖ தேவைக்காக பந்தல் போடுவது கூடும்.

❖ பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து பந்தலை அலங்காரம் செய்வது மார்க்கத்திற்கு முரணான செயலாகும்.

❖ மக்களின் நடமாட்டத்திற்கும், வாகனங்கள் செல்வதற்கும் இடையூறு செய்யும் விதத்தில் பந்தல் போடுவது கூடாது.

❖ ஒவ்வொரு காரியத்தையும் துவங்கும் போது பிஸ்மில்லாஹ் கூறி துவங்குவது பரக்கத் நிறைந்ததாகும்.

❖ இந்த அடிப்படையில் பிஸ்மில்லாஹ் கூறி பந்தக்கால் நட்டிவிட்டால் அக்காரியம் பரகத் நிறைந்ததாக ஆகி விடும்.

❖ அதை ஒரு நிகழ்ச்சியாக நடத்துவதற்கு மார்க்கத்தில்

அனுமதியில்லை.

❖ அதற்காக உறவினர்களை அழைப்பதும், அழைக்கப்படாதவர்கள் வருத்தப்படுவதும், அழைக்கப்பட்டவர்கள் வராத போது திருமண வீட்டினர் வருந்துவதும் மார்க்கத்தில் இல்லாத செயலாகும்.

மணமகனுக்கு தங்க மோதிரம்

இன்றைய பேஷன் கலாச்சாரத்தில் மாப்பிள்ளைக்கு தங்க மோதிரம் அணிவித்து விடும் வழமை இருந்து வருகிறது. தங்கம் அது சிறிய பையனாக, ஆண் குழந்தையாக, மாப்பிள்ளையாக யாராக இருப்பினும் ஆண் சமுதாயத்திற்கு முற்றிலும் ஹராம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நபி (ஸல்) தன் வலது கையில் பட்டையும் இடது கையில் தங்கத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு இந்த இரண்டும் என் சமுதாயத்தில் உள்ள ஆண்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. "ஹராம்" என்று கூறினார்கள்.

தங்கம் ஆண்களில் சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடின்றி அனைவர் மீதும் ஹராம்.

நூல் : மழாஹிருல் ஹக் பாகம் : 5 பக் :198

மேலும் சமீபத்திய அறிவியல் கல்லூரிகளின் ஆய்வுப்படி, ஆண்கள் தங்கம் அணிவதால் அவர்களின் ஆண்மைத் தன்மை குறைகிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இவையன்றி சடங்குகளாக அரங்கேறும் கூலிச்சோறு, காரை போடுதல், தாலி கட்டுதல், துணை மாப்பிள்ளை அழைத்துச் செல்லல் போன்றவற்றிற்கு எவ்வித மார்க்க ஆதாரங்களும் இல்லை. வெற்றுச் சடங்குகளே!

மாற்று மத அன்பர்கள் பள்ளிவாசலில் பிரவேசிக்கலாமா?

❖ திருமண நிகழ்ச்சிகள் பள்ளிவாசல்களில் நடைபெறுகின்ற போது மாற்று மத சகோதரர்கள் (வெளிப்) பள்ளிக்குள் வருவதைக் கூட சிலர் தடை செய்கின்றனர். இது சரியா? தவறா?

❖ மாற்று மத சகோதரர்கள் பள்ளிவாசலில் நுழையலாம் (அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறலாம்).

இது ஹனபீ மத்ஹபின் சட்டமாகும்.

நூற்கள் : (i) அல்பிக்ஹுல் இஸ்லாமீ பாகம் : 6; பக் : 435

(ii) மஆரிபுல் குர்ஆன் பாகம் : 4; பக் : 355

(iii) பத்லுல் மஜ்ஹூத் ஷரஹ் அபீதாவூத் (பக் ; 274)

ஹனபி மத்ஹபின்படி மக்காவிலுள்ள பள்ளியி (ஹரம் ஷரீபி)லும் மாற்று மத அன்பர்கள் நுழையலாம்.

❖ ஹனபீ மத்ஹபின்படி அறியாமை கால அமைப்பில் காபிர்களிடம் நடைமுறையில் இருந்து வந்த நிர்வானமாக ஹஜ் / உம்ரா செய்வதை மட்டும் தடை செய்யப்பட்டுள்ளது.

நூல் : அல்-பிக்ஹுல் இஸ்லாமீ

❖ பள்ளிவாசல் நிர்வாகிகளாகவும், பராமரிப்பவர்களாகவும் காவலாளிகளாகவும், மாற்று மத அன்பர்கள் நியமிக்கப்பட மாட்டர்கள்.

திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்கள்

திருமணத்திற்கு விலக்கப்பட்டவர்கள் 2 வகை :

1. நிரந்தரமாக விலக்கப்பட்டவர்கள்
2. குறிப்பிட்ட காலம் வரை விலக்கப்பட்டவர்கள்

நிரந்தரமாக விலக்கப்பட்டவர்கள் 3. வகையினர்

❖ வம்சத்தின் முறையில்

❖ திருமணம் முடித்த முறையில்

❖ பால்குடியின் முறையில்

வம்சத்தின் வழியில் விலக்கபட்டவர்கள்

❖ தாய் - நன்னி

❖ மகள் - பேத்தி

❖ தாயின் சகோதரிகள்

❖ தன் சகோதரிகள் - இவர்களின் மகள்கள்

❖ தந்தையின் சகோதரிகள் - தாதி

❖ சகோதரரின் மகள் - இவர்களின் மகள்கள்

குறிப்பு : பால்குடியின் மூலம் உண்டாகும் இது போன்ற உறவுகளும், விலக்கப்பட்டவர்கள். (பால்குடி சகோதரியின் தாய் மற்றும் பால்குடி மகனின் சகோதரியைத் தவிர).

திருமணத்தின் மூலம் நிரந்தரமாக விலக்கப்பட்டவர்கள்

❖ மனைவியின் தாயும், மனைவியின் மகளும்

❖ தந்தையின் மனைவியும், மகனின் மனைவியும்

❖ நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள்

குறிப்பிட்ட காலம் வரை விலக்கப்பட்ட பெண்களில் சிலர்

❖ தன் மனைவியின் சகோதரிகள்

❖ கற்பமுள்ள பெண்

❖ இத்தாவில் இருக்கும் பெண்கள்.

அரவாணிகளும், அதன் சட்டங்களும்

1. முஷ்கில் : ஆணும் அல்லாமல் பெண்ணுமல்லாமல் அலியாக இருப்பது.

2. கைருமுஷ்கில் : ஆண் அல்லது பெண் இருவரின் தன்மையில் ஏதாவது ஒரு தன்மை மிகைத்து இருப்பது.

❖ ஒரு அரவாணியிடம் பெண்ணின் தன்மை மிகைத்திருந்தால் பெண்ணாக அறிவிக்கப்படும். அந்த அரவாணி ஆணின் தன்மை மிகைத்திருந்தால் ஆணாக பாவிக்கப்படும்.

❖ ஒரு அரவாணி ஆணாக இருந்தால் அவருக்கு ஆணின் சட்டமும், பெண்ணாக இருந்தால் பெண்ணுடைய சட்டமும் தரிபடும்.

நூல் : மஸாயிலே நிகாஹ்

❖ ஒரு அரவாணியிடம் ஆணின் தன்மையும் இல்லை, பெண்ணின் தன்மையும் இல்லை என்றால் அவர்களை திருமணம் முடிப்பது கூடாது.

நூல் : துர்ருல் முக்தார்

❖ ஒரு அரவாணியிடம் பெண்ணின் தன்மைகளும், உறுப்புகளும் இருந்து மார்பகம் இல்லாமல் இருந்தால் அந்த அரவாணியை திருமணம் முடிக்கக் கூடாது.

❖ ஒரு முஷ்கிலை (ஆணும் அல்லாத பெண்ணும் அல்லாத அலியை) திருமணம் முடிப்பது கூடாது.

❖ கைருமுஷ்கிலை (ஆண் அல்லது பெண் இருவரின் தன்மைகளில் ஏதாவது ஒரு தன்மை மிகைத்து இருக்கும் அரவாணியை) திருமணம் முடிப்பது கூடும்.

❖ அதாவது அந்த அரவாணியிடம் ஆண் தன்மை மிகைத்திருந்தால் பெண்ணைத் திருமணம் முடிப்பதும் அல்லது பெண் தன்மை மிகைத்திருந்தால் ஆணைத் திருமணம் முடிப்பதும் கூடும்.

❖ ஒரு பெண்ணை ஒரு அரவாணிக்கு திருமணம் முடித்து வைத்து அந்த அரவாணி ஆணாக இருக்கும் பட்ஷத்தில் பெண்ணின் தன்மைகள் நிறைந்து காணப்பட்டால் அந்த திருமண பந்தம் பாதிலாகி(முறிந்து)விடும்.

❖ ஒரு அரவாணி ஆண் ஒரு அரவாணி பெண்ணைத் திருமணம் முடித்து அந்த பெண்ணுக்கு பெண் குறி மட்டும் இல்லை என்றால் அந்த கணவனுக்கு இஷ்டம் இருக்கிறது.

அதாவது அவன் விரும்பினால் அந்த அரவாணியை வைத்துக் கொள்ளலாம். இல்லை என்றால் அந்த அரவாணியை தலாக் விட்டு விடலாம்.

❖ ஒரு அரவாணி ஆண், அரவாணி பெண்ணைத் திருமணம் முடித்து தனிமையில் இல்லாமல், உடலுறவு கொள்ளாமல் அந்த அரவாணியை தலாக் விட்டால் அவன் அந்த அரவாணி பெண்ணுக்கு பாதி மஹ்றைக் கொடுக்க வேண்டும்.

❖ ஆணும் அல்லாமல் பெண்ணுமல்லாமல் அரவாணியாக இருப்பவர்கள் ஆபரணங்கள் அணிவது மக்ரூஹ் ஆகும்.

(ஆதாரம் : ரத்துல் முக்தார்).

❖ முஷ்கில் என்னும் அரவாணி தனியாக பயணம் செய்யக் கூடாது.

❖ அரவாணிகள் கத்னா செய்வது நம்மிடத்தில் சுன்னத்தாகும்.

(ஆதாரம் : ரத்துல் முக்தார்)

வலீமா விருந்து

திருமணம் முடித்து முதலிரவு முடிந்த பிறகு கணவன் சார்பாக தரப்படும் விருந்திற்கு வலீமா என்று கூறப்படும்.

வலீமா கொடுக்க வசதியுள்ளவர்கள் வலீமா விருந்து கொடுப்பது சுன்னத்து முஅக்கதாவாகும்.

அவரவர் வசதிக்கு ஏற்றவாறு விருந்து ஏற்பாடு செய்யலாம். பெயருக்காக, புகழுக்காக வலீமா கொடுப்பது கூடாது..

திருமணம் முடிந்து மூன்று நாளைக்குள் வலீமா கொடுத்து விட வேண்டும். வலீமா விருந்துக்கு செல்வந்தர்களை மட்டும் அழைத்துவிட்டு, ஏழைகளை அழைக்காமல் இருப்பது தவறாகும்.

ஒருவர் வலீமா விருந்திற்கு அழைத்தால் விருந்தில் கலந்து கொள்வது சுன்னத்தாகும்.

வலீமா விருந்தில் பாவமான செயல்கள் நடந்தால் அதில் கலந்து கொள்ளக் கூடாது.

அழைப்பு இல்லாமல் வலீமா விருந்தில் கலந்து கொள்வது கூடாது.

அதே போல் விருந்தில் ஏற்பட்ட குறைகளை வெளியே போய் சொல்வதும் கூடாது.

❖ திருமணம் நடைபெறுவதற்கு முன் வழங்கப்படும் விருந்துகள் 'வலீமா' வாக ஆகாது.

__ஆதாரம் :__

1. மஸாயிலெ நிகாஹ்-வஅஹ்காமெ தலாக்
2. ஷாதீ அவ்ர் ஷரீஅத்

பால்குடியின் மூலம் ஏற்படும் சட்டங்கள்

குழந்தையின் பாலகப்பருவமான 2வயதிற்குள் ஒரு பெண்ணிடம் ஒரு மிடருபால் குடித்தாலும் அங்கே ஹராம் தரிபட்டு விடும். அவளைத் திருமணம் செய்வதும் ஹராம் ஆகும். அது போன்றே அவருடைய மகளும் ஹராம் ஆகிவிடுவார்.

❖ ஒரு பெண்ணிடமிருந்து பீச்சிய பாலைப் பாத்திரத்திலிருந்து ஒரு குழந்தை குடித்தாலும் ஹராம் தரிபடும்.

❖ ஒரு கன்னிப் பெண்ணுக்கு பால் சுரந்து அதை ஒரு குழந்தை குடிப்பதின் மூலம் அவளும், அவளது அம்மா, சகோதரி அனைவருமே ஹராம் ஆகுவார்கள்.

❖ ஒரு பாத்திரத்தில் தண்ணீரும், தாய்ப்பாலும் கலந்து இருக்கும் போது அதை ஒருவன் குடித்து விட்டால் அப்போது எது மிகைத்து இருக்கிறது என்பதைப் பார்த்து தீர்ப்புச் செய்ய வேண்டும். தண்ணீரை

விட பால் மிகைத்து இருந்தால் அப்போது ஹராம் தரிபட்டு விடும். பால் குறைவாக இருப்பின் அதன் மீது ஹராம் ஏற்படாது.

❖ ஒரு பெண் பால் குடியினுடைய காலத்தில் ஒருவனுக்கு இரத்தம் கொடுத்தால் அந்த இரத்தத்தின் மூலம் அவள் ஹராம் ஆக மாட்டாள்.

நூல் : ஆப்கே மஸாயில் அவ்ர் உன்கா ஹல் பக் : 87

❖ ஒரு அரவாணி (ஆணும் அல்லாத பெண்ணும் அல்லாத ஒருவருக்கு பால் உண்டாகி அதை ஒருவன் குடித்தால் அப்போது ஹராம் என்பது தரிபடும். இந்த சட்டம் அந்த அரவாணியிடம் பெண் தன்மை மிகைப்பாக இருந்தால் தான்.

அதே போல் ஆண் தன்மை அதிகம் உள்ள அரவாணிக்கு பால் வந்து அதை ஒருவன் குடித்தால் ஹராம் ஏற்படாது.

நூல் : ஜவ்ஹரா; பக் : 85

❖ ஒரு குழந்தை வயது முதிர்ந்த பெண்ணிடமிருந்தோ, அல்லது இறந்து போனவளிடமிருந்தோ பாலைக் குடித்தால் அதன் மீதும் ஹராம் என்பது தரிபட்டு விடும். ஆனால் 9வயது குறைவாக உள்ள சிறுமியிடம் ஒருவன் பால் குடித்தால் அவன் மீது ஹராம் என்பது வராது.

(நூல் : துர்ருல் முக்தார்)

❖ ஒரு பெண் தன் பாலை பீச்சி ஒருவனுடைய காதில் ஊற்றுவதின் மூலம் பால்குடி என்பதோ, அதன் மீது ஹராம்என்பதோ வராது.

(நூல் : ஆப்கே மஸாயில் அவ்ர் உன்கா ஹல்)

❖ ஒரு குழந்தை தனது பாலகப்பருவமான 2 வயதுக்குள் ஒரு பெண்ணிடம் பால் குடித்திருந்தால் அக்குழந்தைக்கும் தாய்க்கும் மத்தியில் 'பால்குடி உறவு' ஏற்பட்டு விடும்.

கணவன் மனைவி உஷார்!
திருமணம் ஹராமாகிவிடும் அபாயம்!!

ஒருவன் ஒரு பெண்ணிடம் ஜினா (விபச்சாரம்) செய்தான் அல்லது இச்சையுடன் தொட்டான் அல்லது இச்சையுடன் முத்தமிட்டான் அல்லது பிறப்பு உறுப்பின் உள் பகுதியை இச்சையுடன் பார்த்தான்.

இப்பொழுது அப்பெண்ணின் மகள், தாய் இவனுக்கு நிகாஹ் செய்வது ஹராமாகும். இவளுக்கு இவனுடைய மகன் தந்தையை மண முடிப்பது ஹராம்.

❖ இதே போன்று தான் ஒரு பெண் ஒரு ஆணை இச்சையுடன் தொட்டாலும் முத்தமிட்டாலும் மர்ம உறுப்பை பார்த்தாலும் அப்பெண்ணின் மகள், தாய் ஹராமாகும். இவனுடைய மகன் தந்தை அவளுக்கு ஹராமாகும்.

❖ கணவன் தனது மனைவியுடைய தாய், நன்னி அல்லது மகள், பேத்தியிடம் மேற்படி முறையில் நடந்து கொண்டாலும் கணவனுக்கு தன் மனைவி நிரந்தர ஹராமாகி விடுகிறாள். உதாரணமாக கணவன் மாமியாவிடம் மேற்படி முறையில் நடந்து கொண்டால் தன் மனைவியிடம் நிரந்தரமாக வாழ முடியாது.

மனைவி மாமனாரிடம் மேற்படி முறையில் நடந்து கொண்டால் இவளும் தன் கணவனுடன் நிரந்தரமாக வாழ முடியாது. கணவனும் மனைவியும் பிரிந்து விட வேண்டும்.

நூல் : அல்ஹீலதுன் நாஜிஜா

❖ பருவ வயதுடைய ஒரு பெண்ணை அந்நிய ஆண் கையை பிடித்து விட்டால் அவனுக்கு அந்த பெண்ணின் தாயும், மகளும் ஹராமாகும். இது போன்று தான் உறவு கொள்வதும், பெண்ணைத் தொடுவதும், முத்தமிடுவதும், இச்சையுடன் பிறப்புறுப்பைப் பார்ப்பது கொண்டும் ஹராம் உண்டாகும்.

ஃபதாவா ஹிந்திய்யா பா : 1; பக் : 291

❖ ஒருவன் ஒரு பெண்ணை வேண்டுமென்றோ அல்லது தவறாகவோ காம உணர்வுடன் தொட்டால் அப்பெண்ணின் தாயும், மகளும் ஹராமாவார்கள். (ஹிதாயா பக் : 309).

கணவன் காணாமல் போய் விடுவதின் சட்டங்கள்

கணவன் காணாமல் போய் விடுவதின் சட்டங்கள்

கணவன் காணாமல் போய் விட்டான். மனைவி காஜீயிடம் இப்பிரச்சனையை கொண்டு வந்து தீர்வு கேட்கிறாள் - இப்போது காஜீ 4 வருடம் எதிர்பார்க்க சொல்வார் இந்த 4 வருடத்தில் தேடி

பார்க்க வேண்டும். எங்கும் இல்லையென்றால் 4 வருடம் முடிந்த பிறகு கணவன் மரணமாகி விட்டான் என்று காஜீ முடிவு செய்து மனைவியை 4 மாதம் 10 நாள் இத்தா இருக்க சொல்வார். இத்தா முடிந்த பிறகு அப்பெண் வேறு கணவரை நிகாஹ் செய்து கொள்ளலாம்.

நிகாஹ் முடித்து இரண்டாம் கணவரிடம் உடலுறவு கொண்டு வாழ்க்கையை துவங்கி விட்ட பிறகு முதலாவது கணவர் திரும்பி வந்து விட்டால் இவள் இத்தா இருந்து விட்டு முதல் கணவரிடம் சென்று வாழ வேண்டும். கணவன் காணாமல் போய் பல வருடம் எதிர் பார்த்த பிறகு காஜியிடம் சென்று முறையிட்டால் அந்தப் பெண் தன் இச்சையை இனியும் அடக்க இயலாத நிலையில் இருந்தால் ஒரு வருடம் எதிர் பார்த்த பிறகு வேறு ஒருவரை நிகாஹ் செய்து கொள்ள அனுமதி உண்டு.

மேற்படி சட்டங்கள் யாவும் மாலிக் மத்ஹபு படியாகும். நிர்பந்தத்திற்காக ஹனபீ மத்ஹபின் சட்ட நிபுணர்கள் இதை எடுத்து ஃபத்வா கூறி வருகிறார்கள்.

நூல் : அல்ஹீலதுன் நாஜிஜா

ஆண்மையில்லாதவனின் சட்டங்கள்

❖ மார்க்க அறிஞர்களின் கருத்துப்படி ஆணுறுப்பு இருப்பதுடன் மனைவியோடு உறவு கொள்ள வேண்டும் என்ற எண்ணமே வராதவனை ஆண்மையில்லாதவன் என்று கூறப்படும்.

❖ ஒரு மனிதன் கன்னி அழிந்தவளோடு உறவு கொள்ள நாடுகிறான் ஆனால் அவனுக்கு கன்னிகளோடு உறவு கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வர வில்லையென்றால் அவனும் ஆண்மையில்லாதவனின் பட்டியலில் சேர்க்கப்படுகின்றான்.

ஆண்மை இழப்புக்கான காரணங்கள்

1. இயல்பாகவே உடலில் பலஹீனம்.
2. நோய்
3. வயோதிகம்
4. சூனியம்

இந்த நான்கு காரணங்களில் ஏதேனும் ஒரு காரணத்தின் மூலம் ஆண்மை இழப்பு ஏற்படலாம்.

❖ எவருக்கு பெண்களிடத்தில் உறவு கொள்ளும் உணர்வு ஏற்பட வில்லையோ அப்பெண்களின் விஷயத்தில் அவர் இன்னீன் (ஆண்மை இழந்தவனாகும்). ஆதாரம் : ஆலம் கீரி பாகம் : 2 பக்கம் :155

❖ கணவன் ஆண்மையில்லாதவனாக இருந்தால் மனைவி அவனை விட்டும் பிரிந்து கொள்வதற்கு இஷ்டம் இருக்கிறது.

❖ திருமணம் முடிக்கக்கூடிய பெண்ணுக்கு தன் கணவன் ஆண்மையில்லாதவன் என்று தெரிந்தே மணம் முடித்திருந்தால் பின்னால் பிரிந்து கொள்வதற்கு அனுமதி இல்லை.

ஆதாரம் : ஆலம் கீரி பக்கம் : 156; பாகம் : 2.

❖ கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளில் மிக முக்கியமானது அவளின் காம இச்சையை பூர்த்தி செய்வதாகும்.

❖ நிக்காஹ்வின் நோக்கமும் இது தான்.

❖ கணவனிடம் இந்த சக்தி இல்லாமல் இருந்தால் என்ன செய்வது மனைவியிடம் இந்த சக்தி இல்லாவிட்டால் என்ன செய்வது என இஸ்லாமிய சட்டத்தில் விளக்கம் உள்ளது.

❖ உடலுறவு கொள்ள சக்தி இல்லாதவனாக இருக்கும் கணவனுக்கு ஒரு வருடம் தவணை கொடுக்க வேண்டும். தவணை என்பது பிறை கணக்குபடி தவணை கொடுக்க வேண்டும். சிலர் சூரிய கணக்குபடி தவணை கொடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். அதற்குள் அவன் சிகிச்சை செய்து உடலுறவுக்கு சக்தியுள்ளவனாக தன்னை ஆக்கி கொள்ள வேண்டும்.

❖ ஒரு வருடம் ஆகியும் அவனுக்கு அந்த சக்தி வராவிட்டால் அவனை காஜீ தலாக் விடச் சொல்லுவார். அவன் மறுத்தால் கணவனையும் மனைவியையும் பிரித்து வைப்பார். இதனால் நிகாஹ்வின் ஒப்பந்தம் முறித்து விடும். இந்த பிரிவை 'தலாக் பாயின்' ஆக கருதப்படும்.

ஆதாரம் : 1. துர்ருல் முக்தார்

2. ஜதீத் பிக் ஹீமஸாயில்

3. அல்ஹீலதுன் நாஜிஜா

குடும்பக் கட்டுப்பாடு

❖ நிரோத் - லூப் போன்ற கர்ப்பத்தை தடுக்கும் சாதனங்களை

உபயோகிப்பது பொதுவாக மக்ரூஹ் ஆகும். தக்க காரணங்கள் இருந்து மருத்துவர் ஆலோசனை வழங்கினால் தற்காலிகமாக இதை உபயோகிப்பது தவறல்ல.

❖ கர்ப்பத்தை தடுக்கும் மருந்துகளை உபயோகிப்பதும் கூடாது.

❖ குழந்தைக்கு உயிர் ஊதப்பட்ட பிறகு கர்ப்பத்தை கலைப்பது ஹராமாகும். இது கொலை செய்வதற்குச் சமமாகும். உயிர் ஊதப்படுவதற்கு முன் கலைப்பதும் கூடாது. ஆனால் இதை கொலை என சொல்லப்பட மாட்டாது.

❖ நான்கு மாதம் முடிந்தவுடன் குழந்தைக்கு உயிர் ஊதப்படுகிறது.

❖ தாயின் உயிருக்கு ஆபத்து என்றால் உயிர் ஊதப்படுவதற்கு முன் கலைப்பது கூடும். நிரந்தரமாக குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்வதும் ஹராமாகும். அடுத்து குழந்தை பிறந்தால் தாயின் உயிருக்கு அபாயம் என மருத்துவ நிபுனர்கள் கூறினால் நிர்பந்தம் என்ற காரணத்தால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது கூடும்.

❖ ஆண்கள் ஆண்மை நீக்கம் செய்து கொள்வதும் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதும் ஹராம் தான்.

நூல் : ஜதீத் பிக்ஹீ மஸாயில்

கூட்டுக் குடும்பத்தின் மூலம் ஏற்படும் தீய விளைவுகளில் சில...

❖ சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றது.

❖ குரோதம், பொறாமை, பேசாமலிருப்பது, சொந்தத்தைத் துண்டித்து வாழல், புறம், கோள், குத்திப் பேசுதல் போன்ற பற்பல பெரும் பாவங்கள் ஏற்படுகின்றது.

❖ பர்தா முறை அனுசரிப்பதில் தவறுகள் ஏற்படுகிறது. இதனால் பல தீய விளைவுகள் ஏற்பட்டுவிடும் அபாயம் உள்ளது.

❖ சில குடும்பங்களில் மாமனாரோ, கொழுந்தனாவோ அவ்வீட்டுப் பெண்ணிடம் தவறாக நடக்க வாய்ப்புள்ளது.

தனிக்குடித்தனம் பற்றி...

நபியவர்கள் அலீ - (ரளி) அவர்களை சிறு வயதிலிருந்தே தங்களது

பொறுப்பில் வீட்டில் வளர்த்து வந்த பின் தனது ... திருமணம் செய்து வைத்த போது தனிக்குடித்தனத்திற்குத் தான் ஏற்பாடு செய்தார்கள்.

கூட்டுக் குடும்பத்தின் நிலை

ஷரீஅத் சட்டத்திற்கு பங்கம் ஏற்படாதவாறு கூட்டுக் குடும்பத்தில் வாழ வழியிருப்பின் இது தான் சிறப்பாகும்.

பர்தா யார்? யாருக்கு?

சிறிய தந்தையின் மகன், மாமா மகன், சச்சா இன்னும் மாமா மகளின் மகன், காபிரான பெண்கள் மற்றும் அந்நிய ஆண்கள் இவர்களிடம் பர்தா முறையை அனுஷ்டிப்பது அவசியமாகும்.

தந்தை, மாமனார், தன் குழந்தைகள், தன் கணவனின் குழந்தைகள் தன் சகோதரர்கள், தன் சகோதரரின் குழந்தைகள் தன் சகோதரியின் குழந்தைகள் முஸ்லிமான பெண்கள் தன்னுடைய அடிமைப் பெண்கள். சிறு குழந்தைகள் (ஊட்டி விடும் வயதில் உள்ளவர்கள்) சிறுவர்கள் (பெண்ணைப் பார்த்தால் கெட்ட உணர்வு ஏற்படாத வயதில் உள்ளவர்கள்) இவர்களுக்கு முன்னால் பர்தா இல்லாமல் இருப்பது கூடும்.

(மஆரிபுல் குர்ஆன் பாகம் : 6 பக் : 397)

பர்தாவில் முகத்தை மறைக்க வேண்டுமா?

❖ ஆம்! பர்தாவில் முகத்தை மறைக்க வேண்டும்.

❖ பர்தா லேசான ஆடையாக இல்லாமல் கனமான ஆடையாக இருக்க வேண்டும்.

❖ அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்

நபியே! உம்முடைய மனைவியருக்கும் உம்முடைய பெண் மக்களுக்கும், முஃமின்களின் பெண்களுக்கும் அவர்கள் தங்களுடைய மேலாடைகளைத் தங்கள் (தலையிலிருந்து முகங்களின்) மீது தொங்க விடுமாறு நீர் கூறுவீராக!

அவர்கள் (கண்ணியமானவர்கள் என) அறியப்படுவதற்கு இது மிக்க நெருக்கமாகும். அப்பொழுது அவர்கள் துன்புறுத்தப்பட மாட்டார்கள். மேலும் அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும், மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கிறான். (33: 59)

நூல் : தர்ஸே திர்மிதி; பாகம் : 3; பக் : 353

குளிப்பின் விளக்கம்

குளிப்பைக் கடமையாக்கும் செயல்கள் :

❖ இந்திரியம் வெளியாகுவது.

❖ கத்னா செய்யப்பட்ட பகுதி பெண் உறுப்பில் மறைவது. (இந்திரியம் வெளியாகா விட்டாலும் சரியே).

❖ தூக்கத்தில் ஸ்கலிதமாகுதல்.

❖ மயக்கம் போதையிலிருந்து தெளிந்த பின் ஈரத்தைப் பெற்றுக் கொண்டு அதை இந்திரியம் என்று கருதுதல்.

❖ ஹைளு (மாத விடாய்) பிரசவத்தீட்டு நின்றபின்.

குளிப்பைக் கடமையாக்காதவை :

❖ மதீ (மதன நீர்) வதீ (வெட்டை) வருதல்.

❖ குழந்தை பிறந்தபின் பிரசவத் தீட்டு வராவிட்டால்.

❖ இனிமா (மலக்குடல் சுத்தம்) கொடுத்தபின்.

குளிப்பின் (முழுக்கின்) பர்ளுகள்

❖ வாய் கொப்பளிப்பது.

❖ நாசிக்குத் தண்ணீர் செலுத்துதல்.

❖ உடல் முழுவதும் நனையுமளவு குளித்தல்.

குளிப்பு கடமையானவர் செய்யக் கூடாதவைகள் :

❖ தொழுவது

❖ குர்ஆனை ஓதுவது (திக்ரு, தஸ்பீஹ் ஸலவாத் முதலியவை ஓதுவது கூடும்).

❖ குர்ஆனை திரையின்றி தொடுவது.

❖ மஸ்ஜிதில் நுழைவது.

❖ கஃபாவை தவாபு செய்வது.

சில விஷயங்கள் :

❖ நிய்யத் செய்வது சுன்னத்தாகும்.

❖ உடலில் சிறிதளவு நனையாமல் இருந்தாலும் குளிப்பு நிறைவேறாது.

❖ உடலில் தண்ணீர் சேர்வதை தடுக்கக்கூடிய நகப்பாலிஷ் பெயிண்ட் போன்றது ஒட்டியிருந்தால் அதை நீக்கும் வரை குளிப்பு கூடாது.

குறிப்பு :

❖ பிரசவமானவர்கள் நிபாஸ் (உதிரப் போக்கு) நின்றவுடனேயே குளித்துவிட்டு தொழ வேண்டும். நாற்பது நாட்கள் வரை தொழுகையைப் பிற்படுத்தக்கூடாது.

❖ பெண்கள் குளிப்பின் போது காதுகள், மூக்குகளில் நகை அணிவதற்காகக் குத்தப்பட்ட துவாரங்களில் தண்ணீரை நன்றாகச் செலுத்த வேண்டும்.

❖ குளிப்பு கடமையான ஒருவர் குளிக்கும் போது ஒரு உறுப்பை மட்டும் கழுவுவதற்கு மறந்து விட்டால் பிறகு நினைவு வரும் போது அந்த உறுப்பை மட்டும் கழுவினால் போதும். மீண்டும் குளிக்கத் தேவையில்லை.

நன்றி : மஸாயில்; மக்தூமிய்யா அரபிக்கல்லூரி மாணவர் மன்ற வெளியீடு.

மனைவி வீட்டை விட்டு வெளியேறுவது பற்றிய சட்டங்கள்

நீங்கள் உங்கள் இல்லத்திற்குள்ளேயே தங்கியிருங்கள். முன்னிருந்த அறியாத மக்கள் (தங்களை அலங்கரித்து கொண்டு வெளியிற் சென்று) திரிந்து கொண்டிருந்ததைப் போன்று நீங்களும் திரியாதீர்கள் (33:33)

இந்த வசனத்தை வைத்து பார்க்கும் போது பெண்கள் வீட்டை விட்டு வெளியேறுவது கூடாது என்று தெரிகிறது. மார்க்கத்தில் வெளியில் செல்வதற்கு அனுமதி உண்டு. தாய்தந்தையை பார்ப்பதற்கு, சொந்த பந்தங்களை பார்ப்பதற்கு, அனுமதி வழங்குகிறது. இன்னும் அவசிய தேவைகளுக்காக கணவனின் அனுமதி இல்லாமல் வெளியில் செல்வது கூடாது.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் தன் தாய் தந்தையை சந்திக்க விரும்பினாலும் கணவன் இடத்தில் அனுமதி வாங்க வேண்டும். (ஹதீஸ்) இந்த ஹதீஸ்களின் மூலம் கணவனின் அனுமதி கொடுத்தால் தான் போக வேண்டும் என்று தெரிகிறது.

ஒரு பெண் 77 கி.மீ பயணம் செய்வதாக இருந்தால் அந்த பயணத்தில் திருமணம் முடிக்க தடை செய்யப்பட்டவர்களுடன் தான் செல்ல வேண்டும் இது ஹனபி மத்ஹபின் சட்டம்.

நூல் : மிர்காத் பாகம் :2 பக் : 386

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் பெண் என்பவள் முழுக்க முழுக்க மறைந்திருக்க வேண்டியவள் ஆவாள். அவள் வெளியேறி விட்டால் ஷைத்தான் அவளைக் கண்ணோட்டமிடத் துவங்கி விடுகிறான். (நூல் : மிஷ்காத்)

நிர்பந்த நிலையில் மட்டுமே பெண்கள் வெளியிற் செல்ல வேண்டும். வீதியோரத்தில் அவர்கள் நடந்து செல்ல வேண்டும். சாலை நடுவில் செல்ல அவர்களுக்கு அனுமதி இல்லை. நூல் : தப்ரானி

மனைவியை அடிக்கலாமா?

இன்னும் (எந்தப் பெண்கள்) அவர்கள் மாறு செய்வார்களென்று நீங்கள் அஞ்சுவீர்களாயின் அவர்களுக்கு நல்லுரை வழங்குங்கள். (அவர்கள் திருந்தாவிட்டால்) படுக்கைகளை விட்டும் அவர்களை அப்புறப்படுத்துங்கள் (அப்பொழுதும் திருந்தாவிட்டால் இலேசாக) அவர்களை அடியுங்கள்.

- அல்குர் ஆன் 4 : 34

❖ பெண்ணும் மதிக்கப்படுவதில் சமமே கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் மதிப்பு மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் அப்பொழுது தான் பரஸ்பரம் அன்பு நிகழும் வாழ்வு ருசிக்கும் அவரவர் கடமையை அறிந்து செயல்பட்டால் பிரச்சனைக்கு வழி இல்லை.

❖ மனைவி கணவனுடைய கடமைகளை நிறைவு செய்யாவிட்டால் கணவனுக்கு சிரமம் ஏற்படுவது இயல்பே. இதனால் கோபம், வாய்த் தகராறு போன்றவை ஏற்படுவதும் சகஜமே.

இப்படிப்பட்ட சந்தர்பங்களில், கணவன் மனைவிக்கு பொறுமை காத்து நல்லுபதேசம் செய்ய வேண்டும். அது பயன் தராதபோது கடுமை

காட்டினால் தான் மனைவி சீர் பெறுவாள் என்ற எண்ணம் மிகைப்பாக இருப்பின் கீழ்வரும் நான்கு காரணங்களுக்கு மட்டும் லேசாக (காயம் ஏற்படாதவாறு) அடிக்கலாம் அதுவும் முகத்தில் அடிக்கக்கூடாது என பதாவா காழீ கான் என்ற நூலில் வருகிறது.

1. கணவன் கூறியும் மனைவி தன்னை அலங்கரித்து கொள்ளாமலே இருந்தால் ...

2. கணவன் உடலுறவுக்கு அழைக்கும் போது தக்க காரணமின்றி மறுப்பது.

3. தொழுகை போன்ற கடமைகளை விட்டுக் கொண்டிருக்கும் போது, கடமையான குளிப்பு குளிக்காமல் இருக்கும் போது.

4. கணவனின் அனுமதியின்றி வீட்டை விட்டு வெளியே சென்று வருவது.

ஆதாரம் : மஜாஹிருல் ஹக் பாகம் : 4; பக் : 14.

படுக்கையில் தள்ளி வைப்பது பற்றி இப்னு அப்பாஸ் (ரளி) அவர்களின் சொற்கள் : படுக்கையில் கணவனின் முதுகின் பக்கம் (பார்க்கும்படி) மனைவியை படுக்க வைக்க வேண்டும். அவளுடன் உடல் உறவு கொள்ளக் கூடாது. நூல் : தஃப்ஸீருல் குர்துபீ

மேலும் அவர்கள் லேசான அடிக்கு மிஸ்வாக் குச்சி மற்றும் அது போன்ற பொருட்களால் அடிப்பது எனவும் விளக்கமளித்துள்ளார்கள்.

தம்பதிகளுக்கு மத்தியில் பிரச்சனைகளைத் தீர்க்க எளிய வழி முறைகள் :

கணவன் மனைவி அவ்விருவருக்குமிடையே பிளவு ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சினால், அவனின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும், அவளின் உறவினரிலிருந்து ஒரு நடுவரையும் நீங்கள் (அவ்விருவரிடமும்) அனுப்பி வையுங்கள். (நடுவர்களாகிய) அவ்விருவரும் (கணவன் மனைவிக்கிடையே) இணக்கத்தை (உண்டாக்க) நாடினால் அவ்விருவரிடையே (இணக்கத்திற்கு) அல்லாஹ் உதவி செய்வான்.

அல்குர்ஆன் 4 : 35

❖ நடுவர்கள் கண்டிப்பாக மனைவி மற்றும் கணவன் புறத்திலிருந்து உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

❖ நடுவர்கள் நீதமானவர்களாகவும், அழகிய சிந்தனை உடையவர்களாகவும், ஃபிக்ஹு ஞானம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

❖ தம்பதிகளின் புறத்திலிருந்து நடுவர்கள் கிடைக்காத பட்சத்தில் நீதமான இரு ஆலிம்கள் நடுவர்களாக ஆக்கப்படுவர்.

நூல் : தஃப்ஸீருல் குர்த்துபீ; பக் : 115

கத்னா (விருத்த சேதனம்)

❖ இப்றாஹீம் (அலை) 80வது வயதில் தங்களுக்கு தாங்களே கத்னா செய்து கொண்டார்கள்.

❖ தெளிவான சொல்லின்படி ரசூல் (ஸல்) பிறக்கும் பொழுதே கத்னா செய்யப்பட்டு பிறந்தார்கள்.

❖ கத்னா செய்வதினால் (பாலியல் சம்பந்தப்பட்ட) நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது.

நூல் : ஹலால் வஹறாம்; பக் : 454 - 455

❖ ஆண் குழந்தைகளுக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சிறு வயதிலேயே கத்னா செய்து விடுவது நல்லதாகும்.

❖ குழந்தையின் வயது அதிகமாகி அவன் தனது வெட்கஸ்தலத்தைப் பிறர் முன் காட்ட வெட்கப்படும் நிலையில், பலரின் முன்னால் அவனை நிர்வாணமாக்குவது ஹறாமாகும்.

❖ சிறுவனது வெட்கஸ்தலத்தை கத்னா செய்பவர் மட்டும் பார்க்கும் படி செய்வது நல்லது.

❖ கத்னாவுக்காக அழைப்புக் கொடுப்பதும், ஊர்வலம் நடத்துவதும் மார்க்கத்தில் இல்லாத செயல்கள்.

❖ கத்னா முடிந்த பிறகு விருந்து கொடுப்பது முஸ்தஹப்பாகும்.

❖ கத்னாவிற்கு முன் விருந்து கொடுப்பது மார்க்கத்தில் இல்லாத செயல்.

❖ கத்னா செய்வது ஸஹீஹான சொல்லின்படி சுன்னத்தாகும். அது இஸ்லாத்தின் அடையாளமாகும்.

ஆப்கே மாஸயில் அவர் உன் கா ஹல் பக் : 139; பாகம் :7

பொருளடக்கம்

மனைவியை விட்டுவிட்டு கணவன் எவ்வளவு காலம் பிரிந்திருக்கலாம்?

கணவன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமைகளில் மிக முக்கியமானது நான்கு மாதத்திற்கு ஒரு தடவையாவது மனைவி உடலுறவு கொள்வதற்கு வசதியாக உடன் இருக்க வேண்டும். உடலுறவு கொள்வதும் கொள்ளாமல் இருப்பதும் அவன் விருப்பமாகும். இந்த கடமையை கருத்தில் கொண்டு சட்ட நிபுணர்கள் மனைவியை விட்டும் கணவன் நான்கு மாதத்திற்கு மேல் பிரிந்திருப்பது கூடாது என்று கூறியுள்ளார்கள். மனைவி, கணவனுக்கு மனப்பூர்வமாக அதற்கு மேலும் பிரிந்திருக்க அனுமதித்தால் நான்கு மாதத்திற்கு மேலும் பிரிந்திருப்பது கூடும்.

ஆதாரம் : இஸ்லாஹி குதுபாத் பாகம் : 2; பக் : 61.

நிச்சயமாக ஒவ்வொரு ஆணும் தன் சக்திக்குட்பட்டவரை தன் மனைவியின் தேவைகளையும் ஆசைகளையும் நிறைவேற்றுவது கடமையாகும். ஒரு பெண் தன் கணவனின் (வாலிப - உடல் உறவு) ஆசைகளை நிறைவேற்றி தருவது கடமையாகும். இதே போல் கணவனும் தன் மனைவியின் தேவைகளையும் ஆசைகளையும் நிறைவேற்றுதல் கடமையாகும் என்று “குன்யதுத் தாலிபீன்” என்ற கிரந்தத்தில் உள்ளது.

“ஒரு ஆணுக்கு உடல் உறவில் ஆர்வம் இல்லாதிருந்தால் கூட, மனைவியின் உடல் உறவை துண்டித்துக் கொள்வது கூடாது. (ஏனெனில் இதில்) பெண்ணிற்கு சங்கடம் உண்டாகும். ஏனெனில் பெண்களின் இச்சை ஆணைவிட அதிகமானதாகும்.

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள் :

“ஆண்களை விட பெண்களின் இச்சை தொண்ணூற்றி ஒன்பது மடங்கு அதிகமானதாகும். ஆயினும் அல்லாஹ் அவர்கள் மீது நாணம் என்னும் போர்வையைப் போர்த்தியுள்ளான்” என்று நாயகம் (ஸல்) கூறினார்கள்.

தகுந்த காரணம் ஏதும் இன்றி நான்கு மாதம் உடல் உறவை தவிர்த்தல் கூடாது.

பெண்ணின் அனுமதியும் பொருத்தமும் இன்றி ஒரு கணவன் நான்கு மாதங்களுக்கு அதிகமான நாட்கள் அவளை விட்டுப்பிரிந்திருத்தல் கூடாது என்று இஸ்லாமிய ஷரீஅத் சட்ட வல்லுனர்கள் (ஃபுகஹாக்கள்) கூறியுள்ளனர்.

நூல் : ஷாமீ பாகம் : 2; பக் : 547

தலாக்கின் சட்டங்கள்

❖ தலாக் விடுவதால் அர்ஷ் நடுங்குகிறது. - அல்ஹதீஸ்

❖ ஆகுமான விஷயங்களில் அல்லாஹ்விற்கு மிகவும் கோபமானது தலாக் விடுவதாகும்.

தலாக்கினால் ஏற்படும் விபரீதங்கள்

(i) இறைவனது அருட்கொடையை புறக்கணித்தவனாக ஆகின்றான்.

(ii) மற்றவர்களை புண்படுத்தியதாகவும் அமைகிறது.

(iii) தங்களுக்குள்ளே குரோதத்தை உண்டு பண்ணுகிறது.

(iv) மனைவியின் உறவினர்களுடன் பகையினை உருவாக்கிறது.

(v) சமுதாய சீர்குலைவும் ஏற்படுகிறது.

தலாக் நிகழ்வதற்குரிய நிபந்தனைகள் :

(i) தலாக் சொல்லும் போது சொல்லுபவர் பருவ வயதடைந்தவராக.

(ii) அறிவுள்ளவராக இருப்பதுடன்

(iii) விழிப்புடன்

(iv) உணர்வுகளுடன் தலாக் கூறியிருக்க வேண்டும். அப்போது தான் தலாக் ஏற்படும்.

இதற்கு மாறாக, பருவ வயதை அடையாதவரோ, பைத்தியமோ, (அ) மயக்க நிலையிலோ ஒருவர் தலாக் கூறினால் நிகழாது.

ஒருவர் நோயினாலோ (அ) மருந்தை உபயோகப் படுத்தியதாலோ உணர்வற்ற நிலையை அடைந்து அந்நிலையில் தலாக் கூறினும் மணமுறிவு ஏற்படாது.

மூடலான வார்த்தைகளால் தலாக் :

ஒருவன் குடும்ப பிணக்குகளை முன் வைத்து பிரச்சனை ஏற்பட்டிருக்கும் போது தலாக் - உடைய நிய்யத்தில் 'உனக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை' என்றோ, 'எனக்கு உன்னுடைய அவசியம் இல்லை' என்றோ 'நான் உன்னை தூரமாக்கி விட்டேன்' என்று கூறினாலும் கூட தலாக் நிகழ்ந்து விடும்.

நூற்கள்:ஷரஹ்ஹிதாயா பாகம்:1; துர்ருல் முக்தார்; பாகம்:1; பக்:235

பிரிவினையை கவனித்து தலாக்கின் வகைகள்

(i) தலாக்ரஜஈ

(ii) தலாக்பாஇன்

(iii) தலாக் முஙல்லழா

ரஜயீ - தலாக்

❖ கணவன் தனது மனைவியைப் பார்த்து நீ தலாக் என்றால் ஒரு தலாக் ரஜஈ ஏற்படும். மனதில் எத்தனையை நினைத்தாலும் தலாக்கை தவிர வேறு எந்த நோக்கமுமில்லாத சரியான, தெளிவான வார்த்தைகளை பிரயோகித்து, ஒன்று இரண்டு தலாக் கூறினால் அதுவும் ரஜ்ஈய்யான தலாக் ஆகும்.

❖ அதே போன்று 2 தலாக் என்று சொன்னால் 2 தலாக் நிகழ்ந்து விடும்.

இதன் சட்டம்

அப்பெண்ணை அவளது இத்தா (3 மாதவிடாய்) காலம் முடிவதற்குள் அவளை மீட்டிக் கொள்ளும் உரிமை கணவனுக்கு உண்டு.

இத்தா காலம் முடிந்து விட்டால் கணவனின் இவ்வுரிமை பறி போய் விடும். அது பாயினாக ஆகி விடும் பிறகு கணவன், மனைவி இருவரும் விரும்பினால் மீண்டும் திருமணத்தை புதுப்பித்து வாழலாம்.

பா இன் தலாக்

தலாக்கிற்கென்றே உரிய தெளிவான வார்த்தைகளை கூறுவதுடன் பாஇன் (அ) பாஇனா என்ற வார்த்தைகளையும் சேர்த்துக் கூறினாலோ (அ) இதே போன்றே வேறு சில வார்த்தைகளால் தலாக்கை உறுதிப்படுத்தினாலோ அது "தலாக் பாஇனாக" ஆகும்.

(உ.ம்.) "கணவன், மனைவியை நோக்கி, நான் உன்னை பாஇனான ஒரு தலாக் விட்டேன் என்று கூறினால் அது பாஇனான தலாக்காக ஆகும்.

இதன் சட்டம்

இத்தாகாலத்திற்குள்ளோ (அ) இத்தா காலம் நிறைவுற்ற பிறகோ மீண்டும் திருமணத்தைப் புதுப்பித்து சேர்ந்து கொள்ளலாம்.

முத்தலாக்

திருமணம் முடித்த பின் கணவன் தன் மனைவியை நோக்கி 3 தலாக் சொல்லும் உரிமையுண்டு. இதனை பயன்படுத்தி ஒருவன் ஒரே நேரத்தில் 3 தலாக்கையும் கூறிவிடுவது இது முத்தலாக் ஆகும்.

இதன் சட்டம்

இவ்விதமான தலாக்கினால் திருமண உறவு முற்றிலுமாக முறிந்து விடும். மீண்டும் இருவரும் மன விருப்பத்துடன் ஒன்று சேரவோ, தன் தலாக்கை மீட்டி கொள்ளவோ, மீண்டும் திருமணம் செய்து உறவைப் புதுப்பித்துக் கொள்ளவோ முடியாது.

மீண்டும் திருமணத்தை புதுப்பித்துக் கொள்ள ஒரேயொரு வழி முறை உண்டு.

ஹலாலா என்னும் வழி முறை :

தலாக் விடப்பட்ட பெண்ணின் இத்தா காலம் நிறைவுற்ற பின் வேறொரு ஆண் அவளை மணமுடித்து அவளுடன் வீடு கூடியிருக்க வேண்டும். பின்னர் அந்த ஆண் அவளை தலாக்விட்ட பின்போ (அ) அவளை விட்டும் அவன் மரணித்து விட்டாலோ, (அல்) இஸ்லாமிய சட்டங்கள் அவர்களுக்கு மத்தியில் பிரிவை ஏற்படுத்தி விட்டாலோ, அதன் பிறகு அவளது இத்தா காலம் நிறைவுற்ற பின்னரே முந்தைய கணவன் அவளை மணக்க முடியும்.

இரத்த அழுத்த நோயுள்ளவரின் தலாக் :

இரத்த அழுத்த நோயுள்ளவர்கள் முற்றிலும் சுய நினைவிழந்து இதனை நம்பத் தகுந்த திறமையான மருத்துவர் ஒருவர் அந்நோயாளியின் (BP) நிலையை உறுதிப்படுத்தினால் அந்நிலையில் அவர் கூறிய தலாக் நிகழாது.

தலாக் விடும் முறைகள் :

(i) தலாக் அஹ்ஸன் (ii) தலாக் ஹஸன் (iii) தலாக் பித்அத்

தலாக் அஹ்ஸன் :

தலாக் கொடுப்பதில் மிகச் சிறந்த முறை மனைவியோடு உறவு கொள்ளாத நிலையில் மாத விடாயிலிருந்து சுத்தமான காலத்தில் ஒரு தலாக் மட்டும் சொல்லி, இத்தா முடியும் வரை அப்படியே விட்டு விடுவது "தலாக் அஹ்ஸன்" எனப்படும்.

தலாக் ஹஸன் :

மனைவியுடன் உறவு கொள்ளாத நிலையில் மாத விடாயிலிருந்து சுத்தமான காலத்தில் ஒரு தலாக் கூறி இரண்டாம் சுத்தம் வரும் போதும், மூன்றாம் சுத்தம் வரும் போதும் முறையே ஒவ்வொரு தலாக் கூறுவது இதற்கு "தலாக் ஹஸன்" எனப்படும்.

தலாக் பித்அத்

1. மனைவியை அவளது மாதத்தீட்டு காலத்தில் தலாக் கூறுவது.

2. மாதவிடாய் நீங்கிய பெண்ணை தான் உறவு கொண்டுள்ள தூய்மைக் காலத்தில் தலாக் கூறுவது.

3. ஒரே நேரத்தில் 3 தலாக் கூறுவது. இவ்வகையான தலாக்குகளை மார்க்கம் விரும்புவதில்லை.

விளையாட்டு வினையாகும் :

❖ விளையாட்டாக, கேலியாக, தன்மனைவியை ஒருவன் தலாக் கூறினும் தலாக் நிகழும் கவனம் தேவை.

❖ அபின், கஞ்சா, கள், சாராயம், போன்றவை அருந்தி போதை நிலையில் ஒருவன் தலாக் கூறினும் தலாக் நிகழும். மருந்து எனும் அடிப்படையில் எதையேனும் அருந்தி போதை ஏற்பட்டு அந்நிலையில் தலாக் கூறினால் நிகழாது.

நூற்கள் : பத்ஹுல் கதீர் ஷாமீ
ஹிதாயா பாகம் : 2; பக் : 337.

❖ கோபமான நிலையிலோ (அ) நிர்ப்பந்தமான நிலையிலோ தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள உயிரையே பயந்து தலாக் என்று கூறினாலும் தலாக் நிகழும். மாறாக நிர்பந்தமான நிலையில் தலாக் கொடுத்து விட்டேன் என எழுதி வாங்கப்பட்டால் அதனை அவனாக நாவால் மொழியாமல் தலாக் ஏற்படாது.

நூற்கள் : ஆலம்கீரி; பாகம் : 1; பக் : 403, 404.
ஷாமீ பாகம் : 2; பக் : 427.

❖ ஒருவன் தன் மனைவியை தலாக்கிலிருந்து மீட்டிக் கொள்ளும் போது நீதமான இரு நபர்களை சாட்சியாக்கிக் கொள்வது முஸ்தஹப்பு. அப்படி இல்லாவிட்டாலும் கூடிவிடும்.

மஸாயிலே நிகாஹ் பக் : 178; ஃபதாவாமஹ்மூதிய்யா
பாகம் : 8; பக் : 137.

❖ சாதாரண பேப்பரில் மூன்று தலாக் எழுதி கொடுப்பதாலும் மூன்று தலாக் நிகழும்

நூற்கள் : மஸாயிலே நிகாஹ்; பக் : 178

ஃபதாவா மஹ்மூதிய்யா பாகம் : 8; பக் ; 143

❖ தலாக்கை கணவன் மறுக்கும் பிரச்சனை காஜியிடம் தீர்ப்பு ரீதியில் வரும் போது தலாக் சொன்னதற்கான இரு சாட்சிகள் கொண்டு வருவது அவசியமாகும்.

மனைவி முன்னிலையில் இருக்க வேண்டுமா?

தலாக் சொல்லும் போது மனைவி முன்னால் இருக்க வேண்டும் என்பதோ, (அ) தலாக்குகளின் வார்த்தைகளை செவியுற வேண்டும் என்பதோ, மனைவியின் பெயர் கூறி தலாக் கூற வேண்டும் என்ற அவசியமோ இல்லை. பொதுவாக கூறினாலும் அவள் முன்னிலையில் இல்லாவிட்டாலும் தலாக் நிகழும்.

ஷாமீ பாகம் : 2; பக் : 590

தனித்தனி வார்த்தைகளில்

த.......லா.......க் என தனித்தனியாக தன் மனைவியை நோக்கி கூறினாலும் தலாக் நிகழும்.

நூல் : குலாஸதுல்ஃபதாவா பக்கம் : 180

பைத்திய நிலையில் தலாக்

ஒருவனுக்கு பைத்தியம் பிடித்து (அ) சூனியம் செய்யப்பட்டவராக உள்ள நிலையில்

(i) அவர் சுய உணர்வின்றி செயல்படுகிறார்.

(ii) தான் என்ன பேசுகிறார் என்பதையே அறியாதவராக உள்ளார் எனில் இவர்கள் கூறும் தலாக் நிகழாது.

❖ குழந்தை இல்லாததைக் காரணம் காட்டி தலாக் சொல்வதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை ஆனால் தலாக் கூறினால் நிகழ்ந்து விடும்.

❖ குழந்தை தேவைப்பட்டால் அடுத்த கல்யாணம் முடித்துக் கொள்ளலாம்.

குலஃ-விவாக பந்தத்தை முறித்தல்

குலஃ என்றால் எப்படி அவசியமான நேரத்தில் ஒரு கணவன் தன் மனைவியை தலாக் சொல்வதற்கு மார்க்கம் அனுமதித்துள்ளதோ அது போல ஒரு மனைவிக்கு கணவனுடன் வாழ முடியாத சூழல் ஏற்படும் போது கணவன் கொடுத்த மஹரையும் பொருளையும் திரும்பக் கொடுத்து அவனிடமிருந்து தன்னை விடுவித்து கொள்வது.

குலஃ - தலாக் வித்தியாசம்

குலஃ என்பது பெண் புறத்திலிருந்து நிகழக்கூடியது. ஆனால் அதை ஏற்றுக் கொள்வதற்கும், ஏற்காமல் இருப்பதற்கும் ஆணுக்கு உரிமையுண்டு. ஆனால் தலாக்கில் பெண் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் தலாக் நிகழ்ந்து விடும்.

❖ குலஃ-வில் கணவன் தலாக் என்ற வார்த்தையை பயன்படுத்த தேவையில்லை.

(உ.ம்) கணவனிடம் மனைவி என்னை குலஃ செய்து விடு என்று கேட்டு நான் குலஃ செய்து விட்டேன் என்று சொன்னால் குலஃ உண்டாகிவிடும்.

❖ குலஃ-வின் மூலம் தலாக் பாயின் நிகழும் அதாவது கணவன் தன் மனைவியை மீட்டவோ அல்லது குலஃ-ஐ திரும்ப பெறவோ முடியாது, மீண்டும் இருவரும் விரும்பினால் இருவரின் பொருத்தத்தோடும் நிகாஹை புதுப்பிப்பது அவசியம். அதாவது இரு சாட்சிகளுக்கு முன்னிலையில் ஈஜாப் கபூல் ஏற்பட வேண்டும்.

❖ தகராறு (பிரச்சனை) என்பது கணவன் புறத்திலிருந்து முதலில் ஏற்பட்டு குலஃ செய்தால் அப்போது மனைவியிடமிருந்து பொருட்களை பகரமாக வாங்குவது கணவருக்கு மக்ரூஹ் ஆகும்.

❖ ஆனால் மனைவியின் புறத்திலிருந்து ஏற்பட்டிருந்தால் அப்போது எந்த அளவு மஹர் கொடுத்திருந்தானோ அதை விட அதிகமாக அவளிடமிருந்து வாங்குவது மக்ரூஹ் ஆகும்.

❖ குலஃ செய்வதற்காக வேண்டி காஜீயின் பக்கம் தேவையாக வேண்டிய அவசியமில்லை. கணவன், மனைவி இருவருமாகவே சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்து விடலாம்.

❖ குலஃ செய்வதற்கு எந்த நேரமும் தடையில்லை மாதவிடாய் நிலையில் குலஃ செய்தாலும் குலஃ என்பது நிகழ்ந்து விடும்.

மனைவிக்குரிய செலவினங்கள்

கணவன் தன் மனைவிக்கு செலவினங்கள் கொடுப்பது கட்டாயம். மனைவி தன் கணவனுடைய வீட்டில் வாழ்வதற்கு குடி புகுந்து விட்டால் அப்பொழுது தனது சக்திக்கு ஏற்றவாறு உண்ண உணவும், தங்குவதற்கு வீடும், உடுத்துவதற்கு உடையும் கொடுப்பது கணவனின் மீது கட்டாயக் கடமையாகும்.

(ஹிதாயா பக் : 437)

❖ கணவன் தன்னுடைய மனைவிக்கு மஹர் கொடுக்கும் வரை மனைவி கணவனுடைய வீட்டில் குடியேறாமலிருந்தால் கணவன் மனைவிக்கு செலவினம் கொடுப்பது கட்டாயம். அதே சமயம் மனைவி கணவனிடத்தில் சண்டைப் போட்டுக் கொண்டு கணவன் வீட்டில் குடியேறவில்லையானால் மனைவிக்கு செலவினம் கொடுப்பது கணவனின் மீது கட்டாயமில்லை.

(ஹிதாயா பக் : 438)

❖ மனைவி சிறுமியாக இருந்தால் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுப்பது கட்டாயமில்லை. அதே சமயம் கணவன் சிறுவனாக இருந்து மனைவி பருவ வயதை அடைந்தவளாக இருந்தால் அவளுக்கு செலவினங்கள் கட்டாயம் கொடுக்க வேண்டும்.

❖ மனைவி நோய்வாய் பட்டுவிட்டால் கணவன் மனைவிக்கு செலவினங்கள் கொடுப்பது கட்டாயமாகும்.

❖ கணவன் செல்வந்தனாக இருந்து மனைவி வீட்டு வேலைக்காக ஒரு வேலைக்காரியை நியமணம் செய்தால் அவளுக்கும் சேர்த்து ஜீவனாம்சம் கொடுப்பது பர்ளாகும். மனைவி ஒன்றிற்கு மேற்பட்ட பணியாட்களை நியமித்துக் கொண்டால் அவர்கள் அனைவருக்கும் செலவினங்கள் கொடுப்பது கணவனின் மீது கடமையல்ல.

❖ மனைவி தனிக்குடித்தனம் போக விரும்பினால் அவள் வசிப்பதற்கு ஒரு வீட்டை தயார் செய்து கொடுப்பது கணவனின் மீது கடமை. கணவனுக்கு முந்திய மனைவியின் மூலம் உள்ள குழந்தைகளை இரண்டாவது மனைவியுடன் குடியமர்த்த வேண்டுமென்பது கட்டாயமில்லை.

❖ கணவன் தன்னுடைய மனைவியின் பெற்றோர்களையோ அல்லது தன்னுடைய மனைவியின் மூத்த கணவனின் மூலமாக பிறந்த குழந்தைகளையோ தன்னுடைய வீட்டிற்கு வருவதை தடை செய்வதற்கு கணவனுக்கு இஷ்டமிருக்கிறது. அதே சமயம் அவர்கள் தன்னுடைய மனைவியிடத்தில் பேசுவதற்கோ அல்லது பார்ப்பதற்கோ தடை செய்வதற்கு எந்த நேரத்திலும் கணவனுக்கு அனுமதி கிடையாது.

❖ ஒருவன் தன்னுடைய மனைவியை தலாக் ரஜயீயாகவோ அல்லது பாயினாகவோ விட்டால் அவளுடைய இத்தா காலம் முடியும் வரை அவளுக்கு ஜீவனாம்சம் கொடுப்பதும், வசிப்பதற்கு தங்குமிடம் கொடுப்பதும் அவசியமாகும்.

❖ கணவன் மரணித்து விட்டால் மனைவிக்கு இத்தா கால ஜீவனாம்சம் கொடுப்பது கடமையாகாது.

❖ சிறியவர்களுடைய ஜீவனாம்சம் தந்தையின் மீது கடமையாகும்.

கணவன் பைத்தியம் ஆகி விட்டால்

கணவன் பைத்தியமாகி விட்டான் அந்த பைத்தியம் மனைவிக்கு தாங்க இயலாத கஷ்டங்களை கொடுக்கும் அளவுக்கு உள்ளது.

எந்தளவுக்கு என்றால் மனைவியை கொலை கூட செய்து விடும் அபாயம் அதிகம் உள்ளது இப்படி இருந்தால் மனைவி காஜீயிடம் முறையிட்டால் பிரித்து வைப்பார்.

பைத்தியம் அந்தளவுக்கு இல்லை ஆனால் உடலுறவு கொள்வதுமில்லை என்றால் காஜீ ஒரு வருடம் தவணை கொடுப்பார் பிறகும் அப்படியே இருந்தால் பிரித்து வைப்பார்.

நூல் : அல்-ஹீலதுன் நாஜிஜா

கணவன் ஜீவனாம்சம் தர முடியாவிட்டால்?

மனைவிக்கு கணவன் ஜீவனாம்சம் கொடுக்காமல் இருந்தால் மனைவிக்கு வேறு வழியில்லாமல் இருந்தால் காஜீயிடம் மனைவி முறையிட்டால் காஜீ நிலமையை தீர விசாரித்து கணவன் ஜீவனாம்சம் கொடுக்காமலிருப்பது ஊர்ஜிதமாகி விட்டால் கணவனை தலாக் விடச் சொல்வார். அவன் மறுத்தால் மனைவியை பிரித்து வைத்து விடுவார். அது தலாக் - பாயின் என்ற வகையாகக் கருதப்படும்.

"ஃபஸ்கு" கணவனுக்கும் மனைவிக்கு மத்தியில் பிரிவை ஏற்படுத்துதல்

கீழ்வரும் காரணங்களை முன்னிட்டு மனைவி கணவனை விட்டு பிறிந்து செல்ல நாடி கணவனிடத்தில் தலாக் வேண்டுகிறாள். ஆனால் கணவன் தலாக் விட மறுக்கின்றான். இந்த சந்தர்பத்தில் அந்த பெண் பிரச்சனையை இஸ்லாமிய காஜீயிடம் கொண்டு சென்று தீர்ப்பை நாடுகின்றாள். அப்பொழுது காஜீ தீர ஆராய்ந்து கணவனுக்கும் மனைவிக்கும் மத்தியில் பிறிவை ஏற்படுத்தி விடுவார். இதற்கு அரபியில் "ஃபஸ்கு" என்று கூறப்படுகிறது.

பிரிவை ஏற்படுத்தக் காரணங்கள்

1. கணவன் ஆண்மையில்லாதவனாக இருப்பது.

2. உணவு, உடை, இருப்பிடம் கொடுக்க வசதி இல்லாதவனாக இருப்பது.

3. கணவன் பல வருடங்களாக மனைவியிடத்தில் எந்த தொடர்புமில்லாமல் இருப்பது அல்லது காணாமல் போய் விடுவது.

4. கணவன் பைத்தியக்காரனாக ஆகிவிடுவது.

5. தாங்கி கொள்ள முடியாத அளவுக்கு அடிப்பது தொல்லை கொடுப்பது.

6. தாங்கி கொள்ள முடியாத அளவு நோயாளியாக இருப்பது எய்ட்ஸ் போன்ற நோய்கள் இருப்பது.

நூற்கள் : அஹ்ஸனுல் ஃபதாவா, ஜதீத்ஃபிக்ஹீ மஸாயில்

தஹ்லீல் (ஆகுமாக்குதல்)

தஹ்லீல் (ஆகுமாக்குதல்)

தஹ்லீல் என்றால் : ஒருவன் தன் மனைவியை முத்தலாக் கூறி விட்ட பின் மீண்டும் அவரின் பொருத்தத்துடன் மனைவியாக்க விரும்புதல்.

தஹ்லீல் செய்வது கூடுமா?

மூன்று தலாக் விட்ட பின் தன் மனைவியுடன் சேர்ந்து வாழ விரும்புபவருக்கு மார்க்கத்தில் சில நிபந்தனைகளுடன் அனுமதி உண்டு.

தஹ்லீலின் நிபந்தனைகள் :

முத்தலாக் விடப்பட்ட பெண் அதற்குரிய இத்தா இருக்க வேண்டும். பின்பு வேறொரு ஆணுடன் சரியான முறையின்படி திருமணம் முடிக்க வேண்டும்.

திருமணம் முடித்து தாம்பத்திய உறவு கொள்ள வேண்டும். பின்பு அவராக அப்பெண்ணை தலாக் விட வேண்டும். அல்லது அவர் மரணித்து விடுவது. அவளை தலாக் விட்டால் அதற்குரிய இத்தாவும், (3 மாதவிடாய் காலம்), மரணித்து விட்டால் அதற்குரிய இத்தாவும் (4 மாதமும் 10 நாட்கள்) இருக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளனைத்தும் நிறைவேறியதற்கு பிறகே முதலாம் கணவன் அவளை திருமணம் செய்து வாழ முடியும்.

நூல் : ஹலால் வஹராம் பக் : 326

தலாக்கின் நிபந்தனையுடன் நிக்காஹ் :

மூன்று தலாக் விடப்பட்ட பெண்ணை மற்ற ஆணுக்கு ஓரிரண்டு நாட்களுக்கு பின் தலாக் விட்டுவிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் திருமணம் முடித்து வைப்பது மக்ரூஹ் தஹ்ரீம் (ஹராமுக்கு நெருக்கமானது) ஆகும்.

எனினும் இந்த முறையில் நிகாஹ் செய்து தாம்பத்திய உறவுக்கு பின் தலாக் கொடுத்துவிட்டு இத்தாவின் காலம் முடிந்து விட்டால். அவளை முதல் கணவன் இரண்டாவது முறையாக நிகாஹ் செய்து மனைவியாக்கி கொள்வது அவனுக்கு ஹலாலாகும்.

நூல் : ஃபதாவா மஹ்மூதிய்யா பாகம் : 3 பக் : 232

இத்தாவின் சட்டங்கள்

❖ தலாக் சொல்லப்பட்ட பெண் மூன்று மாதவிடாய் காலம் இத்தா இருக்க வேண்டும்.

❖ கணவன் இறந்துவிட்ட பெண்ணின் இத்தா காலம் 4 மாதம் 10 நாட்களாகும்.

❖ கர்ப்பமான பெண்ணின் இத்தா காலம் குழந்தை பெற்றெடுக்கும் வரை. கர்ப்பமுள்ள பெண் இரட்டைக் குழந்தை பெற்றெடுத்தால் இரண்டாவது குழந்தை பெற்றெடுத்த பின் இத்தா முடிந்து விடும்.

❖ தலாக் விடப்பட்டு இத்தா இருக்கும் பெண் மாதவிடாய் வராத பெரியவளாகவோ, சிறியவளாகவோ இருந்தால் மூன்று மாத காலம் இத்தா இருக்க வேண்டும்.

❖ ஒரு பெண் கணவர் இறந்ததற்குப் பின் அல்லது தலாக் விடப்பட்ட பின் இத்தா இருப்பது வாஜிபாகும்.

❖ ரஜயீ தலாகின் இத்தாவில் அலங்கரிப்பதில் தவறில்லை.

❖ மற்றவகையான இத்தாவில் அலங்கரிப்பது கூடாது.

❖ கணவனின் மரணத்திற்கான இத்தாவில் துக்கம் அனுசரிப்பதற்காக கீழ்கண்ட காரியங்களை கவனித்தல் அவசியம்.

❖ பூவைக்கக் கூடாது.

❖ எண்ணெய் தேய்க்கக் கூடாது.

❖ சுர்மா போடக் கூடாது.

❖ மருதாணி போடக்கூடாது.

❖ நறுமணச் சாயம் பூசப்பட்ட ஆடைகள் அணியக்கூடாது.

❖ கலர் ஆடைகள் அணியலாம். வெள்ளைச் சேலை தான் கட்ட வேண்டுமென்பதில்லை.

❖ கர்ப்பிணிப் பெண்ணை தலாக் விட்டால் குழந்தைப் பெற்றெடுப்பதோடு அவளுடைய இத்தா காலம் முடிகிறது. எனவே அவள் விரும்பினால் மறுமணம் செய்து கொள்ளலாம்.

❖ கணவன் தன்னுடைய மனைவியோடு வெளியூரில் வசிக்கும் போது கணவன் இறந்த பின் மனைவி இத்தா இருக்கையில் அங்கு போதுமான வசதி இல்லை எனில் வசதியுள்ள அருகாமையில் உள்ள ஊரில் இத்தா இருந்து கொள்ளலாம்.

❖ கணவனுடைய வீட்டில் இத்தா இருக்கக் கூடிய பெண்ணுக்கு உயிருக்கோ, அல்லது உடமைக்கோ பங்கம் ஏற்படுமானால் பாதுகாப்பான அருகில் உள்ள ஊருக்கு சென்று இத்தாவை தொடர்ந்து கொள்ளலாம்.

❖ இத்தா இருக்கும் பெண்ணுக்கு உடல் நிலை சரியில்லாமலிருந்தால் முடிந்தால் மருத்துவரை வீட்டிற்கு அழைத்து சிகிச்சை பெற வேண்டும். அப்படி இல்லையெனில் நோய் கடுமையாக இருக்கும் பட்சத்தில் வெளியில் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

❖ கூட்டுக் குடியிருப்பில் இத்தா இருக்கும் பெண், தன் கணவனுக்கு எவ்வளவு இடம் உரிமையோ அந்த இடத்திற்குள் அவள் இத்தா இருக்க வேண்டும். கூட்டுக் குடியிருப்பில் பொதுவாகப்பயன் படுத்தக்கூடிய நுழைவாயிலுக்கு வரக்கூடாது.

❖ இத்தா இருக்கக் கூடிய பெண்ணுக்கு தலையில் ஏதாவது இடையூறு ஏற்பட்டால் எண்ணெய் தேய்க்கலாம். தேவையின்றி எண்ணெய் தேய்த்தல் கூடாது.

❖ ஒரு பெண்ணுக்கு ஆப்ரேஷன் மூலமாக குழந்தைப் பிறக்கின்றது. பின்பு அவளுடைய கணவன் இறந்து விட்டான் என்ற செய்தி தெரிகின்றது. இப்பொழுது தன்னுடைய மருத்துவ சிகிச்சையை முடித்துக் கொண்டு தன்னுடைய கணவன் வீட்டில் இத்தாவை தொடங்க வேண்டும். இடையில் மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டால் அந்த நோய் உயிருக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் மருத்துவமனையிலே சிகிச்சைப் பெற்றுக் கொள்ளலாம்.

❖ பருவம் எய்தாத தலாக் விடப்பட்டப் பெண் 3 மாதங்கள் இத்தா இருந்து கடைசி ஒரு நிமிடத்திற்கு முன்பு அவளுக்கு மாதவிடாய் உடைய இரத்தம் வந்து விட்டால் மீண்டும் 3 மாதவிடாய் காலம் வரை இத்தா இருக்க வேண்டும்.

❖ திருமண முடித்த ஆணும், பெண்ணும் உறவு கொள்வதற்கு தடையில்லாமலிருந்து ஒரே அறையில் தங்கியபின் உறவு கொள்ளாமல் அவளை தலாக் விட்டாலும் அப்பெண் இத்தா இருப்பது அவசியமாகும்.

இத்தா எதற்காக?

தலாக் விடப்பட்ட பெண் மூன்று மாதமும், கணவன் இறந்து விட்ட பெண் நான்கு மாதம் 10 நாட்களும் இத்தாயிருக்க வேண்டும் என்பது மார்க்கம் விதித்துள்ள சட்டமாகும். இதில் பல்வேறு நன்மைகள் உள்ளன. அவற்றுள் சில :

(i) ஒவ்வொரு மாதத்திலும் மாதவிடாய் வருவதை கவனித்து பெண் கர்ப்பமாக இருக்கிறாளா? இல்லையா? என்று தெரிந்துக் கொள்ளலாம்.

(ii) தலாக் விட்ட கணவன் – மீண்டும் மனைவியை மீட்டிக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் இவ்வாறு கால அளவு நீட்டப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இவ்விரண்டையும் தவிர இன்ன பிற காரணங்களும் இத்தாவினால் ஏற்படும் சிற்சில நன்மைகளாகும்.

இவைகள் மட்டுமே இத்தாவிற்குரிய உண்மைக்காரணங்கள் அல்ல. காலத்திற்கு ஏற்ற சில அறிவுப்பூர்வமான தத்துவங்கள் பதில்கள் (ஹிக்மத்) தான் இவையாகும். இவை தத்துவங்கள் என்பதை தான் (2:228) வசனத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது.

இது தவிர நமக்கு விளங்காத பல அறிவார்ந்த காரணங்களும் இருக்கலாம். அதனை சட்டமியற்றிய அல்லாஹ் ரஸூல் மட்டுமே அறிவர். எந்தக்காரணமும் விளங்கவில்லையென்றாலும் சட்டத்தை செயல் படுத்த வேண்டும் என்றிருக்க அந்த ஹிக்மத் தற்காலத்தில் இல்லை என்று எப்படி சட்டத்தை மறுக்க முடியும்?

இதனை உணர்ந்துக் கொண்டால் ஒரு முறை மாதவிடாய் வந்து விட்டாலே அவள் கர்ப்பமில்லை என்று தெரிந்து விடுமே? எனவே வீணான இரு மாதவிடாய்க் காலம் எதற்கு? நவீன உலகில் “ஸ்கேன்” போன்ற கருவிகளால் குழந்தை வயிற்றில் உள்ளதா? என்பது வெகு விரைவில் தெரிந்து விடும் என்றிருக்க இத்தா எதற்காக என்ற ஐயங்கள் எழாது.

❖ கணவன் இறக்கும் போது மனைவியின் வயது 60, 70ஐ தாண்டி விட்டால் 40 நாட்கள் இத்தா இருந்தால் போதுமே? எனும் அர்த்தமற்ற கேள்விகளுக்கு வேலையில்லாமல் போகும்.

‘இத்தா’ என்றால் என்ன...?

கணவன் தன் மனைவியை தலாக் விட்டு விட்டாலோ அல்லது ஈலாவு, மற்றும் குல்ஃ போன்ற ஏதோ ஒரு முறையில் நிகாஹ் முறிந்து விட்டால் அல்லது கணவர் இறந்து விட்டாலோ ஆக இந்த அனைத்து முறைகளிலும் மனைவி சில காலங்கள் தன் வீட்டிலேயே தங்க வேண்டும். இந்தக் காலம் முடியும் வரை வெளியில் எங்கும் செல்வதோ, மேலும் வேறு திருமணம் செய்துக் கொள்ளவோ கூடாது. இந்த காலம் முடிந்து விட்டால் அப்பெண்ணுக்கு பிரியமுள்ள ஆணை மறுமணம் செய்து கொள்ளலாம். இந்தக் காலத்தைக் கழிப்பதற்கு இத்தா என்று சொல்லப்படுகிறது.

❖ கணவன் எந்த வீட்டில் தலாக் விட்டானோ அதே வீட்டிலேயே மனைவி இத்தா இருக்க வேண்டும். இத்தாவில் இருக்கும் போது தேவையானால் பகலில் வெளியில் செல்லலாம். கண்டிப்பாக இரவில் வெளியில் செல்லக்கூடாது. இத்தா காலத்தில் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது.

❖ மூன்று மாதவிடாய் காலங்கள் முடிந்து விட்டால் இத்தாவின் காலங்கள் முடிந்து விட்டது. எனவே அப்பெண் தான் விரும்பும் ஆணை மறுமணம் செய்து கொள்ளலாம்.

❖ கணவன் ஒரு தலாக் விட்டிருந்தாலும், முத்தலாக் விட்டிருந்தாலும், அதே போன்று தலாக் பாயின் விட்டிருந்தாலும், தலாக் ரஜயீ விட்டிருந்தாலும் அனைத்திற்கும் ஒரே சட்டம் தான்.

❖ பருவமடையாத பெண்ணைத் தலாக் விட்டிருந்தாலோ அல்லது மாதவிடாயே வராத முதுமையடைந்த பெண்ணை தலாக் விட்டிருந்தாலோ இவர்கள் இருவரும் மூன்று மாதங்கள் இத்தா இருக்க வேண்டும். இதன் பின் தாங்கள் விரும்பியதை செய்து கொள்ளலாம்.

❖ தலாக் விடப்பட்ட பெண் மாதங்களைக் கணக்கு வைத்து இத்தா இருக்கும் போது மாதவிடாய் வந்து விட்டால் மூன்று மாதவிடாய் காலங்கள் இத்தா இருக்க வேண்டும். 3 மாதவிடாய் காலம் முடியாத வரை இத்தா காலம் முடியாது.

❖ வேறு ஒருவரின் மனைவியை தன் மனைவி என தவறுதலாக எண்ணி உறவு கொண்டு விட்டார் ஒருவர். இப்போது இப்பெண் இத்தா இருக்க வேண்டும். இத்தா பூர்த்தியாகாத வரை அப்பெண் தன் கணவனோடு உறவு கொள்ளக்கூடாது. மேலே கூறப்பட்ட சட்டபடியே இப்பெண்ணிற்கும் இத்தாவின் சட்டம் உண்டு. எனினும் இவ்விருவருக்கும் பாவம் உண்டு இதன் மூலம் பிறந்த குழந்தை ஹராமல்ல. அக்குழந்தை அவளை உறவு கொண்டவனின் வம்சமாகும்.

❖ ஏற்கனவே திருமணம் முடிக்கப்பட்ட பெண்ணை, அவளுக்கு இன்னும் திருமணம் முடிக்கவில்லை என்றெண்ணி அவளைத் திருமணம் செய்து உறவு கொண்டபின்பு தான் அவளுடைய கணவன் இன்னும் உயிரோடு இருக்கிறான் என்றோ அல்லது இன்னும் தலாக் விடவில்லை என்றோ அல்லது இருவரும் ஒரே தாயிடம் பால் குடித்துள்ளோம் என்றோ அறிந்து கொண்டான். அப்போதிருந்து அவள் இத்தா இருக்க வேண்டும். இவன் தவ்பா செய்து கொள்ள வேண்டும். ஆனால் இன்னும் உறவு கொள்ளவில்லை எனில் இத்தாவாஜிப் அல்ல. இப்படிப்பட்ட பெண்ணோடு தனிமையில் இருந்தாலும் இத்தா வாஜிப் அல்ல. இப்படிப்பட்ட பெண்ணோடு உறவு கொண்டால் மட்டுமே இத்தா வாஜிப்.

❖ இத்தா இருக்கும் பெண்ணிற்கு அவளை தலாக் விட்டவன் தான் உணவு, உறைவிடம், உடை கொடுக்க வேண்டும்.

❖ தலாக் பாயினோ அல்லது முத்தலாக்கோ விடப்பட்ட பெண் இத்தா இருக்கும் போது அவளுடைய கணவன் அவளை உறவு கொண்டு விட்டால் தலாக் விட்டதற்கு மூன்று மாதவிடாய் காலங்களும் இடையில் உறவு கொண்டதற்கு மூன்று மாதவிடாய் காலங்களும் இத்தா இருக்க வேண்டும்.

❖ தலாக் விடப்பட்ட பெண் வீட்டில் இத்தா இருக்கும் போது பிற ஆண்களோடு கலக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அவளுக்கு நல்ல விதமான திரையை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

கணவனை இழந்த பெண் இத்தா இருக்கும் முறை

ஒரு பெண்ணின் கணவர் இறந்து விட்டால் அப்பெண் உறவு கொள்ளப்பட்டாலும், உறவு கொள்ளப்படவில்லையானாலும் மாத விடாய் வருபவளாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான்கு மாதம் பத்து நாட்கள் இத்தா இருக்க வேண்டும். அவள் கர்ப்பமாக இருக்கும் போது கணவன் இறந்திருந்தால் குழந்தை பெற்றெடுக்கும் வரை இத்தா இருக்க வேண்டும். கணவன் இறந்த ஓரிரு மணி நேரத்தில் குழந்தை பிறந்து விட்டாலும் இத்தா காலம் முடிந்துவிடும். அவள் எந்த வீட்டில் இருக்கும் போது கணவன் இறந்தானோ அதே வீட்டிலேயே இத்தா இருக்க வேண்டும். இத்தா இருக்கும் பெண் உணவு போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு வெளியில் செல்ல அனுமதியுண்டு. எனினும் கண்டிப்பாக இரவில் வீட்டில் தான் இருக்க வேண்டும். அண்ணியப் பெண்கள் அவளிடம் செல்வதால் தவறேதுமில்லை.

❖ எந்த வீட்டில் இத்தா இருக்கிறாளோ அவ்வீட்டில் தான் விரும்பிய இடத்தில் இத்தா இருக்கலாம். ஓர் இடத்தை மட்டும் குறிப்பாக்குவது அவசியமில்லை.

❖ "பாயின்" தலாக் விடப்பட்ட பெண் இத்தா இருக்கும் போது கணவன் இறந்து விட்டால் தலாக் உடைய இத்தாவின் நாட்கள் அதிகம் இருந்தால் அந்தக் கணக்குப்படி இத்தா இருக்க வேண்டும் கணவன் மரணித்த இத்தாவின் நாட்கள் அதிகம் இருந்தால் அதைக் கணக்கு வைத்து இத்தா இருக்க வேண்டும்.

ஆனால் தலாக் ரஜயீ விடப்பட்ட பெண் இத்தா இருக்கும் போது கணவன் இறந்து விட்டால் "தலாகின்" இத்தா இன்னும் பூர்த்தியாகவில்லை எனில் கணவன் "இறந்ததின்" இத்தா தான் இருக்க வேண்டும்.

❖ கணவன் இறந்து விட்ட செய்தி 4 மாதம் 10 நாட்கள் கழித்த பின்னே மனைவிக்கு கிடைத்தது என்றால் மனைவிக்கு இத்தா காலம் முடிந்து விட்டது. எனவே மீண்டும் இத்தா இருக்க வேண்டிய அவசியமில்லை.

இதே போல் தன் கணவன் தன்னை தலாக் விட்டு விட்டார் என்ற செய்தி தலாக்கின் இத்தா காலம் முடிந்தபின் கிடைத்தால் அவளுக்கு இத்தா பூர்த்தியாகி விட்டது. எனவே அவளுக்கு இத்தா வாஜிப் அல்ல.

❖ மனைவி ஏதோ ஒரு வேலையாக வெளியில் சென்றிருந்தாலோ அல்லது அண்டை வீட்டிற்கு சென்றிருக்கும் போதோ கணவன் இறந்து விட்டார் என்ற செய்தி கிடைத்தால் உடனே திரும்பி வந்துவிட வேண்டும். தான் எந்த வீட்டில் வசித்து வந்தாளோ அதே வீட்டில் இத்தாவை துவங்க வேண்டும்.

❖ சில பெண்கள் கணவன் இறந்த பின் ஓராண்டிற்கும் மேலாக இத்தா இருக்கின்றனர். இது முற்றிலும் ஹராமாகும்.

குழந்தைப் பராமரிப்பு

1. கணவன் மனைவிக்கு மத்தியில் பிரிவு ஏற்பட்டு விட்டால் குழந்தை தாயிடத்தில் இருப்பது தான் ஏற்றமானது. நூல் :ஹிதாயா : பக்கம் : 412.

2.குழந்தையினுடைய செலவினங்களுக்காக பணம் கொடுப்பது தந்தையின் மீது கடமையாகும். இவ்விஷயத்தில் தாயை நிர்பந்திக்கப்பட மாட்டாது.

3. இக்குழந்தையை பராமரிக்க தாயில்லையென்றால் கீழ்க்கண்டவர்கள் அக்குழந்தையை பராமரிக்க பொறுப்பேற்பர். (வரிசைக்கிரமமாக) :

❖ தாய்

❖ அம்மாவின் அம்மா

❖ அத்தாவின் அம்மா

❖ சகோதரிகள்

i) உடன் பிறந்த சகோதரிகள்

ii) தாய் வழிச் சகோதரிகள்

iii) தந்தை வழிச் சகோதரிகள்

❖ காலாம்மா (தாயின் சகோதரி)

❖ குப்பிமார்கள் (தந்தையின் சகோதரிகள்)

4. மேற்கூறப்பட்ட பெண்களுக்கு திருமணமாகி விட்டால் அக்குழந்தையைப் பராமரிக்கக்கூடிய கடமை நீங்கி விடும். ஆனால் அக்குழந்தையினுடைய பாட்டிக்கு கணவன் (பாட்டன்) இருந்தாலும் அக்குழந்தையைப் பராமரிக்கக் கூடிய கடமை நீங்காது.

5. குழந்தையை பராமரிப்பதற்கு பெண் புறத்திலிருந்து எவருமில்லையென்றால் வாரிசுதாரர்களில் எவர்மிக நெருக்கமானவர்களோ அவர்கள் அக்குழந்தையைப் பராமரிப்பதற்கு தகுதியானவர்கள்.

6. ஆண் குழந்தையாக இருந்தால் தனது சுயதேவைகளை தானே நிறைவேற்றிக் கொள்கின்ற வயதான 7 வயது வரை அக்குழந்தையைப் பராமரிக்க வேண்டும்.

❖ ஆண்குழந்தையை 7 வயது வரை மேற்கூறப்பட்டவர்கள் பராமரிக்க வேண்டும்.

❖ அதற்குமேல் பருவமெய்தும் வரை தந்தையின் பொறுப்பாகும்.

❖ பருவமடைந்த பின் தானாக அக்குழந்தை செயல்பட முடியுமென்றிருப்பின் தானாக செயல்பட அதற்கு உரிமை உண்டு.

நூல் - துர்ருல் முக்தார்

❖ பெண் குழந்தையாக இருந்தால் அக்குழந்தை பருவமெய்தும் வரை மேற்கூறப்பட்டவர்கள் பராமரிப்பது கடமையாகும்.

விபச்சாரத்தின் சட்டங்கள்

விபச்சாரத்தின் பால் நீங்கள் நெருங்காதீர்கள்; நிச்சயமாக அது மானக்கேடானதாக இருக்கிறது. (அன்றியும் தீமையான) வழியால் அது மிகக் கெட்டதாகும்.

(குர்ஆன் 17 : 32)

"நெருங்காதீர்கள்!" - என்பது அந்நியப் பெண்ணின் உடலைப் பார்ப்பதும் விபச்சாரத்திற்கு நெருக்கமானதாகும்.

❖ விபச்சாரம் செய்வதால் மனிதனுக்கும், மிருகத்திற்கும் எவ்வித வேறுபாடுமில்லை.

மிருகங்களுக்கு திருமணம் அவசியமில்லை என்பது போல் விபச்சாரியின் திருமணமும் அவசியமில்லை.

விபச்சாரம் ஹராமானதற்கு இரு காரணங்கள்

1. விபச்சாரம் வெட்கமற்ற செயலாக இருக்கிறது. மனிதனிடம் வெட்கமற்ற தன்மை இருந்தால் அவன் மனிதத் தன்மையிலிருந்து வெளியேறி விடுகிறான்.

ஹதீஸில் கூறப்பட்டுள்ளது;

வெட்கத்தை நீ இழந்து விட்டால் விரும்பியதை செய்து கொள்! மேலும் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். வெட்கம் ஈமானின் கிளையாகும். - (புகாரீ)

2. வாழ்க்கையில் குழப்பம் ஏற்படுகிறது.

விபச்சாரத்தால் எல்லையில்லா குழப்பம் ஏற்படுகிறது.

விபச்சாரம் ஆயிரக்கணக்கான மற்ற குற்றங்களுக்கு சமமாக இருக்கிறது. என நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

❖ திருமணம் ஆனவன் விபச்சாரம் செய்தால் ஏழு வானங்களும், ஏழு பூமிகளும் சபிக்கின்றன. இன்னும் நரகத்தில் இவர்களின் வெட்கத்தலத்திலிருந்து வெளியேறும் அசுத்தங்களால் (துர் நாற்றத்தால்) நரகவாசிகளே வெறுப்படைவார்கள்.

❖ திருமணம் முடித்தவர்கள் விபச்சாரம் செய்தால் கல்லெறிந்து கொல்ல வேண்டும். திருமணம் முடிக்காதவர்களாக இருந்தால் 100 கசையடி கொடுக்க வேண்டும்.

❖ விபச்சாரத்தின் மூலமாக கொடிய எய்ட்ஸ் நோய் உருவாகி உலக பொருளாதாரத்தை நசுக்கி வறுமையை உண்டு பண்ணுகிறது. எய்ட்ஸின் காரணமாக இன்று உலக நாடுகள் வறுமையை தழுவிக் கொண்டிருக்கின்றன.

❖ எந்த ஒரு சமுதாயம் விபச்சாரத்தில் மூழ்கியிருப்பார்களோ, அவர்கள் கொடிய வறுமைக்குள்ளாவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். - (தர்கீப்)

❖ எந்த சமுதாயத்தில் மானக்கேடான செயல்கள், விபச்சாரங்கள் அதிகம் ஏற்படுகின்றதோ அந்த சமுதாயத்தினரிடையே மரணங்கள் அதிகம் ஏற்படும் என்று நபிகள் நாயகம் ஸல் அவர்கள் கூறினார்கள்.

❖ விபச்சாரத்தில் பிறந்த (ஆண், பெண்) குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைப்பது கூடும்.

❖ விபச்சாரத்தின் மூலம் வம்சம் தரிபடாது.

❖ கணவன் மற்ற பெண்ணிடம் விபச்சாரம் செய்வதின் மூலம் அவனின் மனைவி திருமண பந்தத்திலிருந்து நீங்கிவிட மாட்டாள். குழந்தையின் வம்சம் தரிபடும். ஆனால் அவன் பாவியாவான்.

நூல் : பதாவா மஹ்மூதிய்யா பாகம் : 3 பக்கம் : 234.

❖ எய்ட்ஸ் ஒரு தொற்று நோயல்ல என்று மருத்துவர்கள் ஏகோபித்து கூறியுள்ளார்கள்.

❖ கொசுக்கள் மூலம் மலேரியா, யானைக்கால், போன்ற நோய்கள் ஏற்படுவது போல் கண்டிப்பாக கொசுக்கடியினால் எய்ட்ஸ் நோய் உருவாகாது என்று மருத்துவர்கள் உறுதியாகச் சொல்கிறார்கள்.

நூல் : எய்ட்ஸ் பற்றி இஸ்லாம் பக்கம் : 230

விபச்சாரத்தின் தீய விளைவுகள்

1. விபச்சாரத்தால் ஆறுவகையான தீமைகள் உண்டாகின்றன. அவைகளில் மூன்று உலகிலும் இன்னும் மூன்று மறுமையிலும் உண்டாகும் என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

மூன்று உலகில் :

1. வறுமை ஏற்படும், 2. மரணவேளையில் இறைவனுக்கும் அவனுக்கும் இடையே திரை போடப்படும், 3. நரகத்தையும் நரகத்தின் அதிபதியான மலக்குகளையும் தன் கண்களால் கண்டு தான் இறப்பான்.

மூன்று மறுமையில் :

1. இறைவன் மறுமையில் விபச்சாரம் செய்தவர்களை கோபப்பார்வையால் பார்க்கிறான். 2. கேள்வி கணக்கு மிகக்கடுமையாக கேட்கப்படும். 3. நெருப்புச் சங்கிலியால் கட்டப்பட்டு நரகத்தில் இழுத்துத் தள்ளப்படுவார்கள்.

❖ விபச்சாரத்தின் காரணமாக மூன்று அபாயங்களை மருத்துவ விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள்.

1. புது நோய் (எய்ட்ஸ்)
2. பொருளாதார சிக்கலில் வறுமை
3. எய்ட்ஸ் நோயினால் மரணம்.

பலதாரமணம்

திருக்குர்ஆன் கூறும் குடும்ப அமைப்புச் சட்டங்களில் ஒன்று தான் பலதார மணம். மக்கள் இதை சரிவர அறியாததாலும், அறிய முயற்சிக்காததாலும் பலர் இதை தவறாகவே காண்கின்றனர்.

இது அதிகாரப்பூர்வமான பல பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் ஓர் அற்புதமான சட்டமாகும்.

ஹிஜ்ரி - 3ல் உஹதுப்போரில் 70 முஸ்லிம்கள் கொல்லப் பட்டதால் மதீனாவில் 70 வீட்டுப் பெண்கள் விதவைகளாயினர். குழந்தைகள் அனாதைகளாயினர். இதற்குத்தீர்வு கூறும் விதமாக விதவைகளுக்கு மறு வாழ்வு கிடைக்கவும், குழந்தைகளுக்கு பராமரிப்பாளர் கிடைக்கவும் இறைவன் கீழ்கண்ட வசனத்தை இறக்கினான் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நன்னான்காக திருமணம் செய்து கொள்ளுங்கள் என்ற வசனத்தை (4:3) இறக்கினான்.

இந்த வசனம் குறிப்பிட்ட ஒரு சிரமமான சூழ்நிலைத் தீர்வாக இறங்கி யிருப்பினும் இச்சூழ்நிலை காலங்காலமாக நடைமுறையில் வேறு பல காரணங்களாலும் ஏற்படுகிறது. அதனால் இவ்வசனத்தின் சட்டம் எல்லா காலத்திற்கும் ஏற்றமானதாக அமைகிறது.

அரபகம், இந்தியா, ஈரான், மிஸ்ரு, பாபிலோன் போன்ற பல நாடுகளில் பலதார மணம் புழக்கத்தில் இருந்து வருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் முந்திய கால வழக்கத்திற்கு மாறாக பலதார மணத்தை கூடாது என்கிறார்கள். விளைவு திருமணமின்றி, தீய வழியில் உறவு முறைகள் நடைபெற ஆரம்பித்து விட்டன. எனவே இப்போது அங்கு உள்ள அறிஞர்களே பலதார மணத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

❖ ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் பல நூற்களை ஆய்வு செய்த பின் இப்படிக் குறிப்பிடுகிறார். பலதார மணம் என்பது வெறும் ஆசைக்கு மட்டுமல்ல, இறைவன் அதில் ஒருவித பரக்கத்தைத் தருகிறான் என்று.

❖ பலதாரமணம் புரிவதால் அண்ணியப் பெண்களுடன் அல்லது விலைமாதுக்களுடன் தவறான முறையில் தொடர்பு வைப்பதைத் தவிர்க்கப்படுகிறது.

❖ எங்கு பலதாரமணம் தடை செய்யப்பட்டுள்ளதோ அங்கு விபச்சாரம் அதிகமாகவே இருக்கும்.

❖ நான்கு பெண்களை மணம் புரிவதற்கு அனுமதித்துள்ள இஸ்லாம் அதைவிட அதிகம் புரிவதை ஹராம் என்கிறது.

❖ அந்த நான்கு பெண்களும் அவர் திருமணம் செய்வதற்கு ஹலாலான பெண்களாக இருத்தல் வேண்டும்.

❖ நான்கு மனைவிகளுக்கு மத்தியில் நீதமாக இருக்க முடியாது என்னும் பட்சத்தில் ஒரே மனைவியோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

❖ ஒரே நேரத்தில் நான்கு பெண்களுக்கு மேல் ஒன்றாக மணம் புரிவது கூடாது.

'நீதம்' - அவசியம்

❖ ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை திருமணம் செய்திருப்போர் அவர்களுக்கு மத்தியில் உணவு, உடை, உறைவிடம் போன்ற அவசியத் தேவைகளின் விஷயத்தில் நீதமாக இருப்பது 'வாஜிப்' ஆகும்.

❖ அம்மனைவியருக்கு மத்தியில் இரவுகளை முறையாகக் கவனித்துத் தங்க வேண்டும். உதாரணமாக முதல் மனைவியிடத்தில் ஒரு வாரம், அடுத்த மனைவியிடத்தில் ஒரு வாரம் எனப்பிரித்து முறையாகத் தங்க வேண்டும்.

❖ மனைவியருக்கு மத்தியில் 'உறவு கொள்வதை' சரிசமமாகப் பிரிக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

❖ பல மனைவியரில் ஒருவரின் மீது இயல்பாகவே, இவரை அறியாமலேயே அதிகப்பிரியம் ஏற்படுவது இயல்பே! தவிர்க்க முடியாதது. எனினும் இதை பகிரங்கமாக வெளிக்காட்டக் கூடாது. அனைத்து மனைவியருக்கும் மத்தியில் சரி சமமாக நடக்க வேண்டும்.

காஜீ

இஸ்லாமிய ஷரீஅத்தின் படி நீதி வழங்குவதற்காக நியமிக்கப்படும் அதிகாரிகளுக்கு இப்பெயர் கூறப்படுகிறது. இவர் இஸ்லாமிய மார்க்கச் சட்ட திட்டங்களை நன்கு அறிந்தவராகவும், ஒழுக்க சீலராகவும், வயது வந்தவராகவும் சுதந்திர புருஷராகவும் இருக்க வேண்டும்.

இப்பதவியை எவரும் வேட்கையுடன் விரும்பிப் பெறக்கூடாது. இதைப் பற்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் பொழுது எவர் காஜீப் பதவியை விரும்பி முயன்று பெறுகின்றாரோ அவர் தனியாக விடப்படுவார். எவர் மீது இப்பதவி வற்புறுத்தி ஒப்படைக்கப்படுகிறதோ அவருக்கு வானவர் மூலமாக உதவியும் வழிகாட்டுதலும் கிடைக்கும் என்று கூறியிருக்கின்றனர்.

காஜீ தம்முடைய அலுவலகத்தைப் பள்ளிவாசலிலோ தம் இல்லத்திலோ வைத்துக் கொள்ளலாம். எல்லா மக்களும் தம்மை அனுகும் வண்ணம் இவர் தம் அலுவலகத்தை வைத்துக் கொள்ள வேண்டும். தம்முடைய பழைய நண்பர்களிடமிருந்தோ, உறவினர்களிடமிருந்தோ அன்பளிப்பை பெறலாமேயன்றி வேறு எவரிடமிருந்தும் பெறக்கூடாது. பழைய நண்பர்கள் உறவினர்கள் அளிக்கும் விருந்துகளுக்கேயன்றி வேறு எந்த விருந்துகளுக்கும் செல்லக்கூடாது. எந்த விதமான வாணிபமும் செய்யக்கூடாது. நீதி பகர்வதோடு வக்ஃபுகளையும், அநாதைகள், இயலாதவர்கள் ஆகியவர்களின் சொத்துகளையும் நிர்வகிப்பதும் இவருடைய அலுவல்களாகும்.

1. காஜீகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம். நீதியை உணர்ந்து இறைவனுக்கு அஞ்சி நேர்மையுடன் தீர்ப்பு வழங்குபவர்கள். இவர்கள் சுவனம் புகுவர் என்றும் மறுமையில் ஒளியிலான மேடை மீது இருப்பர் என்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

2. உண்மையை உணர்ந்து உண்மைக்கு மாற்றமாக அநீதியாக தீர்ப்பு வழங்குபவர்கள்.

3. உண்மையை உணராத நிலையில் அநீதியாக தீர்ப்பு வழங்குபவர்கள். இவர்கள் இருவரும் நரக நெருப்பில் உழல்வார்கள்.

காஜீகளின் பொறுப்பைப் பற்றி கடுமையான முறையில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்து சென்றுள்ளதால் பயபக்தி யுடையவர்கள் இப்பதவியை ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். காஜீ

பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களிடம் கலீஃபா கூறிய போது. எனக்கு அதற்குத் தகுதியில்லை என்று அவர்கள் வினயமாக பதில் உரைத்தார்கள். நீர் பொய்யுரைக்கின்றீர் என்று கலீஃபா கூற பொய்யுரைப்பவன் எப்படி காஜியாக முடியும்? என்று கலீஃபாவை மடக்கினார்கள்.

அதன் காரணமாக அவர்கள் சொல்லொணாத் துன்பங்களை நுகர வேண்டியதாயிற்று. காஜிப்பதவியை ஏற்று அதில் தவறு செய்து நகரத்தில் உழல்வதை விட இவற்றை நுகர்வது மேலென அவர்கள் கருதினார்கள்.

காஜிகளுக்குத் தலைவர் காஜியுல் குஜாத் என்றும் ஸர் காஜீ என்றும் பல்வேறு விதமாக அழைக்கப் பெறுகின்றனர்.

நன்றி : M.R.M.அப்துர்ரஹீம் எழுதிய இஸ்லாமிய கலை களஞ்சியம்

முஃப்தி

❖ சட்டத்தை மக்களுக்கு அறிவிப்பவர் முஃப்தீயாவார்.

காஜீ

❖ சட்டத்தை எடுத்துக் கூறுவதுடன் அதை நடைமுறைப்படுத்துபவர் காஜீ எனப்படுவார்.

❖ காஜீ தீர்ப்பு விஷயத்தில் அபூயூஸுஃப் ரஹ் அவர்களின் கூற்றை அதிகம் கவனிப்பார்.

வலீ என்றால் யார்?

பொறுப்புதாரிக்கு வலீ என்று சொல்லப்படும். வலீ முஸ்லிமாக, புத்தி சுவாதீனமுள்ளவராக, வயதுக்கு வந்தவராக இருப்பது அவசியமாகும். வலீயாக பெண்களும் இருக்கலாம் பிள்ளைகளுக்கு தந்தை தான் வலீயாக உள்ளார். தந்தை இல்லாவிட்டால் தாத்தா, (தந்தையின் தந்தை) வலீயாக உள்ளார். இவர்கள் யாவரும் இல்லாவிட்டால் சொந்த சகோதரர்கள் வலீயாக ஆகுவார்கள். வயதுக்கு வந்த பெண் வலீயுடைய அனுமதி இல்லாமல் தனது (குப்வு) பொருத்தத்துடன் திருமணம் செய்து கொண்டால் அது கூடிவிடும்.

(குப்வு) பொருத்தமின்றி திருமணம் செய்து கொண்டால் நிகாஹ்கூடும். ஆனால் வலீகாரர் விரும்பினால் அவ்விருவரையும் பிரித்து வைக்க அதிகாரம் உண்டு.

வக்கீல் யார்?

வலீ - யாரை தனக்கு பதிலாக நியமிக்கிறாரோ அவருக்கு வக்கீல் என்று சொல்லப்படும்.

உடலுறவின் சிறப்புகள்

முஸ்லிம்களுக்கு அவர்கள் செய்யக்கூடிய ஒவ்வொரு செயலும் வணக்கமாக ஆகி விடுகிறது. சாதாரணமாக சாப்பிடுதல் குடித்தல் உட்காருதல் எழுதல் தூங்குதல் செல்லுதல் போன்ற செயல்கள் கூட ஷரீஅத்தின் சட்டம் வகுத்து தந்துள்ள வழியின் பிரகாரம் நடக்கிற போது அவைகள் வணக்கங்களாக மாறி விடுகிறது.

இந்த அடிப்படையில் ஒரு மனிதன் தன்னுடைய இச்சையை தீர்த்துக் கொள்வதற்காக அவனுடைய மனைவியோடு தாம்பத்ய உறவில் ஈடுபடுவது கூட ஷரீஅத்து கூறும் ஒழுக்கங்களோடு இருந்தால் அதுவும் வணக்கமாக மாறிவிடுகிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்; ஒரு மனிதன் தன்னுடைய மனைவியோடு உடலுறவு கொள்ளும் போது நன்மை கிடைக்கிறது என்று.

அப்பொழுது சஹாபாக்கள் யா ரஸூலல்லாஹ்! உடலுறவு கொள்வதில் என்ன நன்மை இருக்கிறது என்று கேட்டார்கள். அது ஒரு மனிதன் இச்சையை, ஆசையைத் தானே தீர்த்துக் கொள்கிறான் என்றார்கள். உடனே ரஸூலுல்லாஹ் (ஸல்) பதில் கூறினார்கள்; ஒரு மனிதன் தவறான வழியில் உடலுறவு கொள்ளும் போது அது தீமையாக மாறி விடுகிறது. இன்னும் அது பெரிய பாவமாகவும் மாறிவிடுகிறது. அதை கவனித்து பார்க்கும் போது இது நன்மையான செயல் தானே என்று பதில் கூறினார்கள்.

தங்கடமில்லாமல் மனைவி உடலுறவு கொள்வதை மறுத்தால் சாபம் ஏற்படும்

எப்பொழுது கணவன் தன்னுடைய மனைவியை உடலுறவு கொள்வதற்காக அழைக்கின்றானோ அப்பொழுது மனைவியின் மீது அவசியமாகி விடுகிறது. அதாவது அவள் அவனுக்கு வழிபட வேண்டும்; திருப்தி படுத்த வேண்டும்.

ஏதாவது ஷரீஅத்துடைய காரணங்கள் இருந்தால் மட்டுமே தவிர மண்ணிக்க படாது ஹைளு நிபாஸ் போன்ற காரணங்கள் இருந்தால்

கண்ணியமான வார்த்தையைக் கூறி தடுத்து விட வேண்டும்.

எந்த ஒரு நோய் இல்லாமல் எந்த நிர்பந்தமும் இல்லாமல் உடலுறவு கொள்வதை விட்டும் மறுத்தால் கட்டாயம் பாவமாகும். இன்னும் கணவனுடைய பெரிய அதிருப்தியாகவும் இருக்கும்.

கணவன் உடலுறவு கொள்வதற்காக வேண்டி தன்னுடைய மனைவியை அழைத்து அந்த மனைவி உடலுறவு கொள்வதை விட்டும் தடுக்கிறாள் என்றால் மலக்குமார்கள் அவளின் மீது சுப்ஹு வரை சபித்துக் கொண்டே இருக்கிறார்கள். (ஹதீஸ்)

மனைவி ஒட்டகத்துடைய முதுகின் மீது இருந்தாலும் அப்பொழுது கணவன் உடலுறவு கொள்வதற்கு விரும்பினால் அப்பொழுதும் மனைவி மறுக்க கூடாது. நூல் : தர்கீப் வதர்ஹீப்.

உடலுறவின் ஒழுக்கங்கள்

உடலுறவிற்கென்று நபி வழியில் பல ஒழுக்கங்கள் உள்ளன. அவைகள் பின் வருமாறு :

❖ உடலுறவு செய்வதற்கு முன்பு முதலில் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று சொல்லி குல் ஹுவல்லாஹு அஹது என்ற சூராவை ஓதி, பின்பு 'அல்லாஹு அக்பர்' என்றும் பிறகு லாஇலாஹ இல்லல்லாஹு என்றும் ஓதி, குழந்தை நன்றாகப் பிறக்க வேண்டும் என்ற எண்ணத்தில்

بِسْمِ اللهِ اَللّٰهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا

பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைத்தான வஜன்னிபிஷ்ஷைத்தான மாரஸக்தனா என்று ஓத வேண்டும்.

❖ கிப்லாவிற்கு கண்ணியம் செலுத்தும் விதமாக உடலுறவின் போது கிப்லாவை முன்னோக்காமல் உடலுறவு கொள்ள வேண்டும்.

❖ உடலுறவு கொள்ளும் போது கணவன் மனைவி இருவரும் நிர்வாணமாக இருப்பது மக்ரூஹ் என்ற காரணத்தால் இருவரும் தங்களை (ஏதேனும் துணியால்) மறைத்துக் கொள்ள வேண்டும்.

❖ உடலுறவு கொள்ள நாடிவிட்டால் இருவரும் விளையாடுவது, அணைத்துக் கொள்வது, முத்தமிடுவது, இது போன்ற செயல்களில்

ஈடுபட்ட பின்பு உடலுறவு கொள்ள வேண்டும்.

❖ ஆண் தனது தேவையை பூர்த்தியாக்கி விட்டால் தனது மனைவியின் தேவை பூர்த்தியாகும் வரை காத்திருக்க வேண்டும்.

❖ உடலுறவின் போது பேசிக் கொண்டு உடலுறவு கொள்வது மக்ருஹ் ஆகும்.

❖ கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ எந்தச் சிரமும் இல்லாவிடின் நான்கு இரவுகளுக்கு ஒரு முறையாவது உடலுறவு கொள்ள வேண்டும்.

❖ ஒருவன் ஒரே இரவில் இரண்டாவதாக உடலுறவு கொள்ள நாடினால் தனது மர்ம ஸ்தானத்தை சுத்தம் செய்து கொண்டு உளூ செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் உளூ என்பது சுத்தத்தையும் ஆர்வத்தையும் அதிகப்படுத்தும்.

❖ குறிப்பிட்ட இரவுகளில் உதாரணமாக ஜுமுஆவுடைய அல்லது திங்கள் கிழமையுடைய இரவுகளில் உடலுறவு கொள்வதை சில இமாம்கள் விரும்புகின்றனர்.

❖ குளிப்பு கடமையாயிருக்கும் நிலையில் முடியை சிறைக்காமல் இருப்பதும், நகங்களை வெட்டாமல் இருப்பதும், ஒழுக்கங்களில் கட்டுப்பட்டவையாகும்.

❖ முதரவில் உடலுறவு கொள்வதற்கு முன்பு கணவன் தனது மனைவியின் நெற்றி முடியை பிடித்து,

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ خَيْرِهَا وَخَيْرِ مَا جَبَلْتَهَا عَلَيْهِ وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّهَا وَشَرِّ مَا جَبَلْتَهَا عَلَيْهِ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின் ஹைறிஹா வஹைறிமா ஜபல்தஹா அலைஹி வஅஊதுபிக மின் ஷர்ரிஹா வஷர்ரிமா ஜபல்தஹா அலைஹி என்று ஓதுவது முஸ்தஹப்பாகும்.

காதல் திருமணம்

இது கூடுமா? கூடாதா? என்பதை ஆய்வதற்கு முன் முதலில்

இத்திருமணத்தால் ஏற்படும் சமூகச் சீரழிவுகளை அறிந்து கொள்வோம்.

1. இவ்வாறான திருமணங்கள் பெரும்பாலும் தோல்வியிலேயே போய் முடிகிறது.

2. காதல் திருமணங்கள் செய்வோரில் 63% பேர் விவாகரத்து, கொலை, தற்கொலை இன்னபிற சமூக பிணக்குகளால் பிரிந்த, அழிந்த ஜோடிகளே அதிகம்.

3. இஸ்லாம் அல்லாதோரின் காதலுக்கு இலக்காகி இஸ்லாத்தை விட்டுச் சென்று அப்படியே வாழக்கூடிய மானம் கெட்டவர்களும் நம்மில் உலா வருகின்றனர். காதலின் மூலமாக தூய்மையான மார்க்கத்தை விட்டு விடும் பேரபாயம் ஏற்படுகிறது.

4. பெரும்பாலும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள் வாழ்வில் சிறிய பிணக்கு ஏற்பட்டாலும் கூட பிரிந்து போய் விடுகின்றனர். இது மட்டுமின்றி! காதலர்களாக இருந்து பின்பு தம்பதியான குடும்பத்தில் கணவன் - தன் மனைவியை வரதட்சணைக்காக கொடுமை பல செய்தும் கொன்றும் வருவதை இன்றைய அன்றாட செய்திகளாக தின, வார, மாத இதழ்களில் காண்கிறோம்.

5. தற்போது காதல் எனும் பெயரால் கடிதங்கள் பரிமாறிக் கொள்வது. தியேட்டர், விடுதி, பூங்கா, கடற்கரை போன்ற இடங்களில் சுற்றித் திரிவது தான் நடந்து வருகிறது.

காதலினால் ஏற்படும் தீங்குகள்

1. அந்நியப் பெண்ணைப் பார்ப்பது
2. அந்நியப் பெண்ணுடன் பேசுவது.
3. அந்நியப் பெண்ணுடன் தனிமையில் சந்தித்தல்.
4. அந்நியப் பெண்ணைத் தொடுதல்.
5. பெற்றோர்களைப் புறக்கணிப்பது

பெற்றோர்களுடைய பொருத்தத்திலே இறைவனுடைய திருப்பொருத்தம் இருக்கிறது. பெற்றோர்களுடைய கோபத்திலே இறைவனுடைய கோபம் இருக்கிறது. (ஹதீஸ்)

அந்நியப் பெண்ணைப் பார்த்தல்

நபியே! விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும் அவர்கள் தங்கள் பார்வையை கீழ் நோக்கியே வைக்கவும். தங்கள் கற்பையும்

பாதுகாத்துக் கொள்ளவும். இது அவர்களை பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்து கொள்கிறான்.

விசுவாசிகளான பெண்களிடம் சொல்லும். உங்களுடைய பார்வையை (பிற ஆண்களை விட்டும்) கீழ் நோக்கி செலுத்துங்கள். உங்களது மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

குர் ஆன் - 24 : 31

“பெண்களிடம் நீங்கள் ஏதாவது ஒரு பொருளைக் கேட்க நேரிட்டால் அதை திரைக்குப் பின்னால் இருந்தே கேளுங்கள்!”

அல்குர் ஆன் - 33 : 53

பார்வை ஷைத்தானின் விஷம் தோய்க்கப்பட்ட அம்புகளில் ஓர் அம்பாகும். அல் - ஹதீஸ்

அந்நியப் பெண்ணுடன் பேசுவது

நீங்கள் அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொண்டீர்களானால் (ஆண்களிடம் பேசும் போது) பேச்சில் நளினம் காட்டாதீர்கள்.

அந்நியப் பெண்களிடம் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் அதிலும் பல நிபந்தனைகளுக்குட்பட்டு தான் குழப்பத்திற்கு வழியில்லாத பட்சத்தில் தான் மார்க்கம் அனுமதியளிக்கிறது.

அந்நியப் பெண்ணுடன் தனிமையில்

தனிமையில் அந்நிய ஆணும், பெண்ணும் சந்தித்தால் அதில் மூன்றாமவனாக ஷைத்தான் இருப்பான். (அல்ஹதீஸ்)

இன்றைக்கு ‘கல்வி விழிப்புணர்வு’ எனும் பெயரில் கோ-எஜுகேஷன் போன்றவற்றில் ஆண், பெண் கலப்பு, தொழிற்சாலைகளில் ஆண், பெண் கலப்பு, பூங்காக்கள், வணிக மையங்கள் ஆகியவை அந்நிய ஆண், பெண் கலந்துறவாடவும், தனிமையில் சந்தித்து பேசவும், வடிகாலாக அமைந்து விட்டன.

அந்நியப் பெண்ணைத் தொடுதல்

தொடுதல் கை செய்யும் விபச்சாரமாகும். (அல் ஹதீஸ்)

விபச்சாரத்தின் பக்கமே நெருங்காதீர்கள் (குர் ஆன்)

ஆக இறை மொழிகளும், நபி மொழிகளும் கூறும் இத்தகைய கடினமான கண்டன எச்சரிக்கைகளைப் பார்த்தால் காதல்

திருமணத்திற்கும் அதற்கு முன்னோடிகளாய் அமையும் எல்லா வழி முறைகளுக்கும் இஸ்லாம் முற்றிலும் எதிரான மார்க்கம் என்பது புரியவரும்.

நிச்சயதார்த்தம் பேசி முடிக்கப்பட்டு விட்டால் நிச்சயிக்கப்பட்ட ஆணும், பெண்ணும் திருமணத்திற்கு முன்பே பழகிக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்த செல்போன்களை வாங்கிக் கொடுத்து உரையாடலை அனுமதிக்கும் பழக்கம் உள்ளது. இதுவும் தவிர்க்கப்பட வேண்டிய விஷயமாகும்.

குழந்தை திருமணம்

நமது மார்க்கச்சட்டம் சில அழகிய சமூக நலன்களை முன் வைத்து பருவமடையாத சிறுவர், சிறுமிகளின் திருமணத்திற்கு அனுமதித்துள்ளது. அவர்களது திருமணம் அவர்களின் வலீயி (பொறுப்பாளரி)ன் அனுமதியுடன் கூடும். அவர்கள் தாங்களாகவே திருமணம் செய்து கொள்ள இயலாது.

அவர்களுக்கு பகரமாக ஈஜாப் - கபூலை அவர்களது வலீயே செய்வார்.

குழந்தைத் திருமண முறை

திருமண அவையில் திருமணத்திற்குரிய இரு சாட்சியாளர்கள் முன்னிருக்க, அவையோர் முன்னிலையில் குழந்தைகளின் பொறுப்பாளர்கள் ஈஜாப் - கபூலை செய்து கொள்வார்கள்.

சிறுவனோ, சிறுமியோ அவளை திருமணம் முடித்துக் கொண்டேன். ஒப்புக்கொண்டேன் என்று கூற வேண்டிய அவசியம் இல்லை. அப்படி கூறுவதை பொருட்படுத்தப்பட மாட்டாது. குழந்தைகளின் பொறுப்பாளரின் சம்மதே போதுமானது.

(மஸாயில் நிக்காஹ் - 60)

விதவைத் திருமணம்

ஒரு விதவைப் பெண் தன் குழந்தைகளைப் பரிமரிப்பதற்காக இரண்டாம் திருமணம் செய்யாமல் இருந்தால் அதற்கு நன்மை உண்டு. திருமணம் செய்து கொள்வதும் கூடும்.

பொருளடக்கம்

எனினும் இன்றைய காலச்சூழலில் இரண்டாம் திருமணத்தை குறையாகக் கருதி வருவதால் திருமணம் செய்து கொள்வதே சிறந்ததும் நன்மைக்குரிய செயலுமாகும்.

பதாவா தாருல் உலூம் பாகம் : 7; பக் : 45

மஸாயில் நிக்காஹ் - 66

கட்டாயத் திருமணம்

ஒருவர் தன் மகளை இன்னவருக்கு மண முடித்துக் கொடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் பயமுறுத்துகிறார். எனவே உயிரைப் பயந்து தன் மகளை குறிப்பிட்ட அந்நபருக்கு திருமணம் முடித்து வைத்தால் மார்க்கச் சட்டப்படி திருமணம் கூடிவிடும். இருப்பினும் இவ்வாறாக நிர்பந்திப்பது பாவமும், கூடாத செயலுமாகும்.

மஸாயிலே நிக்காஹ் - 62; ஷாமீ - பாகம் 2 ; பக் : 373

பருவ வயதை அடையாத பெண் பிள்ளையை பெண்ணின் தந்தை அல்லது தந்தையின் தந்தை இவ்விருவரின்றி வேறு எவரேனும் வலீயாக இருந்து திருமணம் முடித்து வைத்திருந்தால், அப்பெண் பருவ வயது எய்திய பின் அந்த மண உறவை முறித்து கொள்ள உரிமையுண்டு.

தன் திருமண மறுப்பு வழக்கை நீதமான முஸ்லிம் நீதிபதியிடம் சமர்பித்து உறவை முறித்துக் கொள்ளலாம்.

சில பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் மனப்பூர்வமான சம்மதமில்லாமல் காசு பணங்களுக்காக, நிர்பந்தமாக மணம் முடித்து வைக்கின்றனர் இத்திருமணம் கூடிவிடும் என்றாலும் மார்க்கம் வரவேற்கக் கூடிய திருமணமல்ல.

பொருளடக்கம்

திருமணத்தின் சட்டங்கள்

மேற்பார்வை

மௌலானா, மௌலவீ, ஹாபிழ், ஷைகுனா ஷைகுத்தப்ஸீர்

பசீர்ஷாஹ் தாமத் பரகாதுஹூம்

முதல்வர் : மக்தூமிய்யா அரபிக்கல்லூரி,

செயலர் : பள்ளபட்டி முஸ்லிம் (ஐக்கிய) ஜமாத் - பள்ளப்பட்டி.

தொகுப்பு

4, 5, 6, 7-ம் வகுப்பு மாணவர்கள்

வெளியீடு

தர்பியதுல் முதஅல்லிமீன் மாணவர் மன்றம்

மக்தூமிய்யா அரபிக்கல்லூரி,

பள்ளப்பட்டி - 639 205.

கரூர் - மாவட்டம்.

பொருளடக்கம்

உரிமைப் பதிப்பு

முதற் பதிப்பு : 12 ஷஃபான் 1428
26 ஆகஸ்ட் 2007

ஹதியா : ரூ. 20-00

தொடர்பு முகவரி

முதல்வர்

மக்தூமிய்யா அரபிக்கல்லூரி (பெரிய மத்ரஸா)

பள்ளப்பட்டி - 639 205.

கரூர் - மாவட்டம்

தொலைபேசி : 04320 - 244886

கைபேசி : 98426 05669

மௌலானா, மௌலவீ, ஹாபிழ், ஷைகுனா, ஷைகுத்தப்ளீர் **பசீர்ஷாஹ்** தாமத் பரகாதுஹும் முதல்வர் : மக்தூமிய்யா அரபிக் கல்லூரி, செயலர் : பள்ளபட்டி முஸ்லிம் (ஐக்கிய) ஜமாஅத் அவர்கள் மாண்புடன் வழங்கிய

மதிப்புரை

எல்லாப் புகழும் ஏக இறைவனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே!

ஸலவாத்தும், ஸலாமும் சங்கைமிகு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்தம் குடும்பம், தோழர்கள், நம் அனைவர் மீதும் உண்டாவதாக! ஆமீன்.

(அப்) பெண்கள் உங்களுக்கு ஆடை நீங்கள் அவர்களுக்கு ஆடை என்ற இறைமறையும், திருமணம் எனது வழிமுறை (சுன்னத்) யார் என் வழிமுறையை புறக்கணிக்கிறாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல. என்ற நபிமொழியும், திருமணத்தின் முக்கியத்துவத்தை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

அருளுக்குரியத் திருமணம் இன்று பொருளுக்குரிய திருமணமாகவும், சன்மார்க்கத் திருமணம் இன்று சடங்கிற்குரியத் திருமணமாகவும் ஆக்கப்பட்டு சின்னா பின்னப்படுத்தப்படுகிறது.

இந்த அவலநிலையை போக்கும் நோக்கில் எங்களது மதரஸா மாணவர்கள் கல்லூரியின் கண்ணியம் நிறைந்த உஸ்தாதுமார்களின் மேற்பார்வையில் மூன்றாவது வெளியீடாக திருமணம் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களையும், உள்ளடக்கி - திருமணத்தின் சட்டங்கள் - என்ற தலைப்பில் தேவையான ஒரு பொக்கிஷத்தை வழங்கியுள்ளார்கள்.

சமுதாய மக்கள் அதை அவசியம் வாங்கி படித்து பயன் பெறுமாறு வேண்டுகிறேன்.

K.M.அஷ்ரப்அலி ஹஸ்ரத்
[பசீர்ஷாஹ் தாமத்பரகாதுஹும்]

பள்ளபட்டி
12-07-2007

பதிப்புரை

கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி மாநகரில் அமையப் பெற்ற சிறப்புமிக்க மக்தூமிய்யா அரபிக்கல்லூரியில் ஓதுகின்ற வாய்ப்பு கிடைத்ததற்கு முதன் முதலில் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முறையில் ஓதுகின்ற காலத்திலேயே நம்மால் முடிந்த சேவையை ஆற்ற வேண்டும் என்ற சிறந்த நோக்கில்தான் அல்லாஹ்வின் மாபெரும் கருணையினால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்.... தர்பியதுல் முதஅல்லிமீன் மாணவர் மன்றத்தின் ஓர் உட்பிரிவாக "நூல் வெளியீட்டுப் பிரிவு" எனத் தொடங்கி... இதுவரை இரண்டு தலைப்புக்களில் நூல்கள் வெளியிட்டு தற்போது மூன்றாம் வெளியீடு "திருமணத்தின் சட்டங்கள்" என்ற பெயரில்.... திருமணம், மஹ்ரு, சாட்சிகள், தலாக், இத்தா போன்ற ஏராளமான தகவல் (மஸாயில்)களை உள்ளடக்கி வெளியிடுகிறோம்.

இந்த ஆக்கங்கள் அனைத்தும் உருவாகுவதற்கு எங்களுக்கு வழிகாட்டக் கூடிய, கண்ணியத்திற்குரிய உஸ்தாதுமார்களான கல்லூரியின் முதல்வர் எங்களது ஆன்மீகத் தந்தை மௌலானா, **மௌலவீ, ஹாபிழ், அல்ஹாஜ் பசீர்ஷாஹ் தாமத் பரகாதுஹும்** அவர்களுக்கும் மற்றும் கண்ணியம் நிறைந்த உஸ்தாதுமார்களான **மௌலானா, அல்ஹாஜ் K.S.முஹம்மத் பாதுஷா, ஹள்ரத் ரஷாதீ** அவர்கட்கும், **மௌலானா A.முஹம்மது வலிய்யுல்லாஹ் ஹள்ரத் யூசுஃபீ** அவர்கட்கும், **மௌலானா E.M.நவாப் பரகத் அலி, ஹள்ரத் யூசுஃபீ, பாஜில் தீஹ்லவீ** அவர்கட்கும், **மௌலானா, ஹாபிழ், அஃப்ஜலுல் உலமா M.ஷேக் முஹம்மத் ஹள்ரத் ஃபாஜில் பாகவீ** அவர்கட்கும் நன்றியையும், நல் துஆவையும் சமர்ப்பிக்கிறோம்.

அதே போன்று இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய தமிழ் மாநில ஜமா அத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் **மௌலானா அல்ஹாஜ் முஹம்மது காசிம் ஹள்ரத்** அவர்கட்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்

மேலும் எங்களின் முயற்சிக்கு ஒத்துழைப்பு செய்யக்கூடிய கல்லூரியின் நிர்வாகக் குழுவினர் மற்றும் புரவலர்கள், சேவையாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். மேலும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் நன்றி செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

வியாபார நோக்கமின்றி வெளியிடப்படுகின்ற எங்களின் வெளியீடுகளை வாழும் தமிழ் முஸ்லிம் சமுதாயம் வாங்கிப் படித்துப் பயன்பெறுமென பெரிதும் விரும்பிக் கேட்டுக் கொள்கின்றோம். முந்தைய எங்களின் இரண்டு வெளியீடு களுக்கு அமோக ஆதரவு கிடைத்ததைப் போன்று இவ்வெளியீட்டிற்கும் பேராதரவு கிடைக்க அல்லாஹ் தவ்பீக் செய்வானாக! ஆமீன்!

தர்பியதுல் முதஅல்லிமீன் மாணவர் மன்றம்
(நூல் வெளியீட்டுப் பிரிவு)
மக்தூமிய்யா அரபிக்கல்லூரி

பள்ளப்பட்டி

12-07-2007

மௌலானா, மௌலவீ, அல்ஹாஜ். **M.முஹம்மது காசிம் ஹஸ்ரத் பாகவீ**

(செயலர் : தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா பேரவை, தமிழ்நாடு.
முதல்வர் : நாஃபிவுல் உலூம் அரபிக்கல்லூரி-யா.ஒத்தக்கடை,
ஆசிரியர் : மறைச்சுடர் மாத இதழ் - மதுரை.
கலீபா : அல்லாமா ரஹ்பரே ஸாலிகீன் ஆரணி பாவா - (ரஹ்)
அவர்கள் அன்புடன் அளித்த

அணிந்துரை

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே!

அல்லாமா ரஹ்பரே ஸாலிகீன் மௌலானா முஹம்மது கமாலுத்தீன் ஹஸ்ரத்-ரஹ்-அவர்கள் தன் சீடர்களுக்கு உபதேசிக்கும் போது மக்களைத் திருத்தும் வழிகள் நான்கு என்றும், அந்த நான்கில் எதைச் செய்தாலும் அது நபிமார்கள் செய்த பணியாக, சுன்னத்தாக அமையும் என்றும் சொல்வார்கள்.

கிதாபுகள் எழுதி வெளியிடும் எழுத்துப்பணி, பயான்கள் மூலமாக நிறைவு பெறும் உபதேசப்பணி, மதரஸாக்கள் மூலம் நடைபெறும் கற்பித்தல் - (கல்விப்) பணி, தானும் கற்றுக் கொண்டே அக்கம் பக்க மக்களுக்கு தீனைச் சொல்லும் தப்லீகு திருப்பணி இந்த நான்கும் தீனைப் பரப்பும் பணிகள்தான் என்றும் ஆலிம்கள் இதில் முக்கியமான கற்பித்தல் எனும் பணியையும் உபதேசித்தல் என்னும் பணியையும் செய்து வருகிறார்கள்; எனவே அவர்களின் சேவை சிறப்பான ஒன்று என்றும் அவர்களைப் போற்றிப் பேசுவார்கள்.

பள்ளபட்டி மக்தூமிய்யா அரபிக் கல்லூரி அந்த இரண்டு சேவைகளுக்கும் உலமாக்களை தயாரித்து அனுப்புவதுடன் மார்க்கத்தைப் பரப்பும் எழுத்துப்பணியிலும் மாணவர்களைப் பயிற்றுவித்து வெற்றி நடைபோட விட்டிருப்பதில் தப்லீகின் மூன்று அம்சங்கள் நிறைவேறி வருவதைப் பார்க்கிறோம். மாணவர்களை இவ்வாறு உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களையும், மதரஸாவின் நிர்வாகப் பொறுப்பாளர்களையும் எவ்வாறு பாராட்டினாலும் தகும்.

இந்த ஆண்டின் அறிவு மடி தவழ் குழந்தையாக இந்த நூல் “திருமணத்தின் சட்டங்கள்” என்ற தலைப்பில் வெளிவருகிறது. திருமணத்தின் அனைத்து அம்சங்களும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளதோடு திருமண உறவின் மார்க்கம் ஒப்புக் கொள்ளும் அளவு எவ்வளவு வரம்பு கடந்த அளவு எவ்வளவு என்பதை அழகு தமிழில் விபரிக்கப்பட்டுள்ளது.

அறிவுப்பசி தீர்க்கும் இந்நூலைப் படிக்கும் அனைத்துத் தரப்பு மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் நூல் அமைந்துள்ளது. வாசகங்களில் விரிவான விளக்கங்கள் அதே சமயம் கடுகில் புகுத்தப்பட்ட ஏழுகடல் நீர் என்பது போல அமைந்த இந்தப்புத்தகம், திருமணம் என்ற உறவைப் பெறப் புகும் அத்தனை மணமக்களும் படிக்க வேண்டிய வாழ்வியல் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

தவறான நடைமுறைகள் புகுந்து விடா வண்ணம் கலந்து ஆய்ந்து தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள இந்நூல் நிச்சயம் துணை செய்யும் திருமணச் சடங்குகளாக இன்று நடைமுறையில் உள்ள மார்க்கம், அனுமதிக்காத சடங்குகளை, இதைப்படிக்கும் மக்கள் இனித் தொட மாட்டார்கள். மார்க்கத்தின் ஒரு முக்கியமான வழிபாடு (இபாதத்) என்று கருதப்படும். இந்த நிகழ்ச்சி இனி உண்மையான இபாதத்தாகவே நடைமுறைப்படுத்தப்படும் என்று நிச்சயம் நம்பலாம்.

நூலைப் பார்க்கும் அத்தனை பேரும் அதை வாங்கவும் வேண்டும். வாங்கும் அத்தனை பேரும் அதைப்படித்து அதன்படி தம்மை வடிவமைத்துக் கொள்ளவும் வேண்டும். என்று இஸ்லாமிய நன்மக்களை வேண்டுகிறேன்.

இது போன்ற ஒரு நன்முயற்சியில் தன் குழந்தைகளை ஈடுபடுத்திய இந்த ஆசிரியப் பெருந்தகைகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும். படித்தவற்றை களத்தில் கொண்டு வரும் அவர்களின் இந்த நடைமுறையை மற்றையோரும் பின்பற்ற வேண்டிய நடைமுறையாகும். இறைவன் அவர்களின் நன்முயற்சியைப் பொருந்திக் கொள்வானாக!

ஆலிஜனாப், அல்ஹாஜ் Rtn. Dr. V.A.அப்துல்கரீம் M.B.B.S., (தலைவர் : மக்தூமிய்யா அரபிக் கல்லூரி) அவர்களும், ஆலிஜனாப், அல்ஹாஜ் Rtn. K.C.அப்துல்ஜப்பார் சாஹிப் (செயலர் : மக்தூமிய்யா அரபிக்கல்லூரி) அவர்களும், வாஞ்சையுடன் வழங்கிய

வாழ்த்துரை

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே உண்டாவதாக!

நமதூர் மக்களால் "பெரிய மத்ரஸா" என அன்போடு அழைக்கப்படும் மக்தூமிய்யா அரபிக்கல்லூரி பல்வேறு சேவைகளை முஸ்லிம் சமுதாய மக்களுக்கு ஆற்றி வருவது தாங்களறிந்ததே!

அச்சேவைகளில் ஒன்றாக... இங்கு பயிலும் மாணவர்கள் தாம் கற்ற கல்வியின் பயனை தமிழ் பேசும் முஸ்லிம்கள் வாழுமிடமெல்லாம் பரவச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்... கடந்த ஆண்டுகளில் தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் போன்ற கடமைகளின் சட்டங்களை உள்ளடக்கி '**மஸாயில்**' என்ற பெயரில் மாபெரும் பொக்கிஷத்தை வெளியிட்டு... மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்று இதுவரை மூன்று பதிப்புகள் வெளிவந்து, தற்போது நான்காவது பதிப்பும் வெளிவந்து விட்டது. இந்த வெளியீடு முஸ்லிம்களுக்கு மிகவும் பயன்தந்தது.

அடுத்து கடந்த ஆண்டு... இஸ்லாமிய சமூகத்தில் இருந்து கொண்டே குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கும்.... கொள்கை மாறிப் போன ஐந்து கூட்டங்களை அடையாளப்படுத்தி... "**குழப்பவாதிகளின் முகவரிகள்**" என்ற தலைப்பில் நூல் வெளியிட்டு மக்கள் சேவையில் இந்நூல் ஒரு 'மைல் கல்லாக' அமைந்தது என்றால் மிகையல்ல. குறிப்பாக இளம் ஆலிம் பெருமக்கள் பெரிதும் இந்நூலை விரும்பி வாங்கிப் படித்துப் பயன் பெற்றனர்.

அதே போன்று இந்த ஆண்டு பட்டமளிப்பு விழாவில் "திருமணத்தின் சட்டங்கள்" என்ற நூல் வெளியிடப்போவது குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த உயரிய சேவையில் மாணவர்களை ஈடுபடுத்தி சிறப்பாக சேவையாற்றி வரும் நமது **கல்லூரியின் முதல்வர் மௌலானா, ஹாபிழ், அல்ஹாஜ் K.M.அஷ்ரப்அலி ஹஸ்ரத் பாஜில் பாகவீ** (பொதுச்செயலாளர்: பள்ளப்பட்டி முஸ்லிம் (ஐக்கிய) ஜமாத் அவர்கட்கும், அவர்களது தலைமையில் செயல்படும் **சங்கைக்குரிய உஸ்தாதுமார்களின் குழுவிற்கும்** நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

அதே போன்று மத்ரஸாவின் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் சிறந்த நற்கூலியை வழங்குவானாக! ஆமீன்!

பள்ளப்பட்டி
12-07-2007

Rtn. Dr.**அப்துல்கரீம்** M.B.B.S.,
Rtn. K.C.**அப்துல்ஜப்பார் சாஹிப்**

இன்ஷா அல்லாஹ்
எமது அடுத்த வெளியீடு
வியாபாரத்தின் சட்டங்கள்

பொருளடக்கம்

பொருளடக்கம்